[illegible]

[illegible]

March 1988.

3C

00224, N22SIX

N38.117


186962

1159

REGD No. M. 3843.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக.

3-MAR 1938


# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு, கக. () திட்டை :சுவர-மாசி 1938 மார்ச் 1௨ () திங்கள் எ.


| எண். | உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் தலைமைப்பேருரை | | 73 |
| 2. | கற்றோர் காண்பொருளும், மற்றோர்காண்பொருளும் | | 77 |
| 3. | திருக்கயிலாயகிரி யாத்திரை | ... | 80 |
| 4. | திருப்பணி விண்ணப்பக் கவிகள் | ... | 89 |
| 5. | திறப்புரை | ... | 92 |
| 6. | மதக்கல்வி | ... | 103 |
| | …றம் ஹிம்சையும் | ... | 107 |
| | …நேசனுக்கு வாழ்த்தும் மதிப்புரையும் | ... | 113 |
| | …ப்புரை மஞ்சரி | ... | 115 |
| | …காரியாத்திரை விளக்கம் | ... | (13-16) |
| | …லோக பஞ்சக விஷயம் | .... | (129-132) |


…ர்:— ராம. து. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

# செய்தித்திரட்டு.

உள்ளூர்:— சிவாலயத்தில் மாசிமக உபயம், தஞ்சாவூர் திரு. வை. பெத்தபெருமாள் பிள்ளையவர்களால் நடத்தப்பெற்றது. மாசிமாதம் வளர்பிறைச் சதுர்த்தசியில் நடராஜாபிடேகம், உள்ளூர் கர்ணம், திரு. மு. பாலசுப்பிரமணிய ஐயரவர்களால் மிகச் சிரத்தையுடன் செய்யப் பெற்றது.

மகாசிவராத்திரி உபயம், வழக்கம்போல குளமங்கலம் திருவாளர், சாமியப்பா பிள்ளையவர்களின் குடும்பத்தினரால் நன்றாக நடத்தப்பெற்றது. தேவகோட்டை, திருவாளர், ராம. அரு. அரு. ராம. அருணாசலச் செட்டியாரவர்கள் வழக்கமாக அனுப்பும் இருபத்தைந்து ரூபாவை சுத்தாத்வித சித்தாந்த சொரூபமாக விளங்கும் உயர்திரு, சச்சிதானந்த சற்குரு சுவாமிகள் இங்கிருப்பதாக மதித்து அவர்கள் பேருக்கு மணியார்டரில் அனுப்ப, அது கொரடாச்சேரியிலிருக்கும் சுவாமிகள் கைக்கெட்ட, அதை அவர்கள் கருத்திற்கிசைந்த கதிரைவேற் பிள்ளைக்கு அனுப்பி மகாசிவராத்திரியில் அபிடேகாராதனைகளை நடாத்தச் செய்து பெறுதற்கரிய பெருமதிப்புக்குரியரானார்கள்.

பலவான்குடி:— நகரசிவாலயத்திலும், குமாரவிநாயகர் திருக்கோவிலிலும் மகாசிவராத்திரிபூஜை நான்குயாமங்களிலும் நன்குநடைபெற்றது.

மஹாசிவராத்திரி பூஜை:-தேவாராதி திருமுறைகளுள்ள எல்லாச்சிவாலயங்களுக்கும் வழக்கம்போல்தேவகோட்டை, திருவாளர், ராம. அரு. அரு. ராம. அருணாசலச் செட்டியாரவர்கள் பணம் அனுப்பி மகாசிவராத்திரி பூஜையை மாண்புடன் நடாத்துவித்தார்கள்.

திருநணா:— தை ௲அ௨ மகோதய புண்ணிய காலத்தில் பவானி காவேரி சங்கமத்தில் ஸ்ரீவேதவல்லிசமேதசங்கமேஸ்வரர்தீர்த்தங்கொடுத்து அஸ்திரராஜதெரிசனம் ஆனதும் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் ஸ்நான தர்ப்பணாதிகளும் அம்மையப்பர் தரிசனமும் செய்து இன்புற்றனர்.

மஹோதய புண்ணியகாலம்:— இவ்வாண்டு தை ... இலட்சக்கணக்கான மக்கள் திருமறைக்காடு, திருவிரா... புரம், பூம்புகார், காவேரி சங்கமம், திருவையாறு ஆகிய ... தீர்த்தமாடிப் புனிதமுற்றனர். திருமறைக்காட்டில் பாகனே... முத்துக்கருப்பன் செட்டியாரவர்களின் அன்ன சத்திரத்திலு... மடத்திலும், பிரதோஷமடத்திலும் பல்லாயிரக்கணக்கான ... வருத்தி உபசரித்தனர்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

OFFICE OF THE ... 8-MAR 1938


# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு கக. } ஈசுவர–மாசி 1938—மார்ச் 1௳ { திங்கள் எ.


உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின்

## தலைமைப் பேருரை.*

(திரு, G. கலியாணம் அவர்கள், B. A., Dip. Econ)

* வேலூரில் 1937ஆ டிசம்பர்மீ 29, 30, 31-ம் தேதிகளில் கூடிய சைவசித்தாந்த மகாநாட்டில் தலைமை வகித்த திருக்கோவலூர் ஆதீனம் - ஞானியார் மடாலயத் தலைவர், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாசாரிய சுவாமிகள் நிகழ்த்திய முன்னுரைச் சுருக்கம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

மெய்யன்பர்களே!

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 32-ஆம் ஆண்டு நிறைவுவிழா இன்பத்தை அனுபவிக்க நாம் எல்லோரும் இங்குக் கூடியிருக்கிறோம். 1913-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்த சமாஜ ஆண்டு விழாவில் அடியேனை இந்த இடத்தில் நிறுத்தினீர்கள். இப்பொழுதும் இந்நிலையில் இருக்கச் செய்தீர்கள். இதற்குக் காரணம் உங்கள் அன்பே. அன்பு காரணம் என்று மாத்திரம் சொல்லிவிடலாமா? அன்பு மட்டுமல்ல இறைவன் திருவருளும் துணை செய்தது. ஆண்டவன் அருளும் அன்பர்கள்...

அன்பும் சேர்ந்த விடத்தே நற்செயல் நடைபெறும். இவ்விரண்டும் கூடிய விடத்து அடியேன் அடங்கித்தானே யாகவேண்டும்! நாம் இங்கே சைவ சித்தாந்தம் பேசுகிறோம்; கேட்கிறோம். நாம் என்றால் உடலா? கேட்கும் சக்தி அறிவிற்கிருந்தாலும் அது ஒரு கருவி கொண்டே கேட்கவேண்டும். சரீரமில்லையானால் நாம் கேட்கத் தகுந்தவர்களல்ல. அறிவற்றஉடல்ஒன்றுஞ் செய்யாது. அல்லது சரீரமில்லாதகாலத்தில் உயிர்ஒன்றுஞ்செய்ய இயலாது. அரசன் மந்திரியுடையவனானால் குடிகளுக்கு நன்மை செய்ய முடியும். மந்திரி முதலியோர் இல்லையேல் அரசன் என்செய வல்லான்! "அமைச்சர சேய்ப்ப நின்றஞ் சவத்தைத்தே" என்று கூறும் சிவஞான போதம். ஆராய்ச்சியினால் நன்று என்று புலப்படும் விஷயங்களைப் பற்றிப் பேசவும், கேட்கவும் ஆவல் கொள்ளவேண்டும். கண்ணினால் பார்ப்பதைவிடக் கேட்பது மேலானது. கேட்டதை ஆராய்ந்தறிவது அதனினும் உயர்ந்தது. நமக்குள் இருக்கும் மனம் புத்தி இவைகள் சடவஸ்துக்கள். புத்தி கண்ணாடி போன்றது. அதற்குச் சுயமான செய்கை கிடையாது. புத்தி அறிவுடன் சேர்ந்தபொழுதே அறிவின் செயல் பிரதிபிம்பிக்கிறது. அறிவு சேர்ந்தால்தான் புத்தி தன் வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறது. அறிவில்லாமல் உறுப்புகள் தங்கள் வேலையைச் செய்து பார்த்தால் ஒன்றுமே குணப்படாது.

அன்பர்களே! பொருள்கள் மூன்று வகையன. அவை மானிடர்களாகிய யாம், நாம் பார்க்கக்கூடிய பொருள்கள், ஆராய்ச்சியால் அடையக் கூடிய பொருள்கள் என்பன. கண்ணால் பார்க்கக்கூடிய பொருள்கள் அறியுந் தன்மையுடையன. உயிரிடத்திலிருக்கும் உயர்ந்த பொருளை ஆராய்வதே அருமையாகும். உலகத்தில் காணப்படுபவைகளை ஐம்புலன்களால் இழுத்து அறிவு முதலியவைகளைக் கொண்டு ஆராயவேண்டும். "மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன்" என்ற திருவாசக அடியைக் கவனிக்க வேண்டும். அடியேன் உங்களைப் பார்க்கவில்லை. உங்கள் உடலைப் பார்க்கிறேன். அழிவதையே அடியேன் நோக்குகின்றேன். உயிரையே பார்க்கமுடியாதென்றால், உயிர்க்குயிரான கடவுளைக் காணுதல் எளிதோ! எக்காலத்தும் யாரும் பார்க்கமுடியாததென்றால் அது சூனியமாகும். எக்காலத்தும் யாவரும் பார்க்கக்கூடிய நிலையான பொருள் கடவுள் என்பதை ஞானசம்பந்தர் காட்டினார். அவர் பார்ப்பார்; மற்றவர்க்கும் காட்டுவார். தன்னை யறிந்தால் அல்லது உலகத்தையறிந்தால் மாத்திரம் ஞானமாகாது. மறைந்துகிடக்கும் பரவஸ்துவைக் காணுவதே ஞானம். கடவுளை நாம் காணலாம்; தொடலாம்; ஆராயலாம் ஆராய்வதற்குச் சாதனங்கள் என்ன? ஒருவன் தலையில் நெருப்புப் பிடித்துக் கொண்டால், எந்தத் தண்ணீர் என்றும் பாராமல் உடனே ஊற்றிக்கொள்வதுபோல், ஆராய்ச்சி செய்யுங்கால், தான் கொண்ட எண்ணம் ஈடேறும் வரை அதைத் தேடியடையவேண்டும். ஆண்டவனை அலைந்து திரிந்து, தேடித் தேடி, ஏங்கி ஏங்கி அழுதாற் பெறலாம். திருவுந்தியாரில்,

"உள்ள முருகி னுடனாவ தல்லது
தெள்ள வரியனென் றுந்தீபற
சிற்பரச் செல்வனென் றுந்தீபற."

186962



என்று கூறியிருப்பது காண்க. ஆனந்த வெள்ளம் உள்ளே யிருக்கிறது. 'வெள்ளத்தின் நடுவே யிருந்தும் நீர் பருகாது தாகத்தால் நாவானது உலர்ந்து போனாற்போல உன் அருட்பெருக்கைப் பெற்றும் துயரத்தினின்றும் நீங்குதற்கு ஆற்றலில்லாத என்னைக்கைவிட்டிடாதே' என்ற பொருள் பட மணிவாசகர் நீத்தல் விண்ணப்பத்தில் ஒரு செய்யுளை அருளியிருக்கிறார். ஆதலின் அன்பர்களே! அறிவுமயமான, ஆனந்தவடிவமான ஒன்றை அறியவேண்டும். அதுவே சிவம். அன்பு ததும்பி யிருப்பதற்கு இரங்குவன் அன்பு வடிவான ஆண்டவன். "சிவனென யானுந் தேறினன் காண்க" என்பர் மணிவாசகனார். "சிவனென்னு நாமம் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்" என்பர் அப்பரடிகளும். உயிர்க்கு எல்லாம் அறியுந் தன்மை வரும். ஆனால் எல்லாம் செய்யும் வல்லமை வரவே வராது. சிவத்தின் சம்பந்தமே சைவம். அனாதியாக எல்லாம் அறிந்த, எல்லாம் செயவல்ல, என்றும் உள்ள வஸ்து சிவபெருமான் என்றைக்கும் சைவ சித்தாந்தாந்தம் உண்டு. சிலரால் வெளிப்படுத்திய பொழுதுதான் ஆரம்பித்தது என்று கொள்ளவேண்டாம். சிவஞான போதத்தில் 'சிவமென்னும் அந்ததர' என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தம் என்பது வேதாந்தம். அதாவது அறிவு நூல் முடிபு என்பது பொருள். தரம் என்றால் மேலானது; அதாவது அதைவிட மேலில்லை. 'அந்ததர' என்றால் வேதாந்தத்தின் முடிவாக உள்ள சித்தாந்தியே. உபநிஷத் என்றால் பரம் பொருளின் சமீபத்தில் கொண்டுபோய் வைப்பது என்பது பொருள். அறிவு நூல் முடிவாக உள்ளதுவே சித்தாந்தம். சித்தியாரில் "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்". ஆகமம் என்றால் ஆப்தர்களிடமிருந்து வரும் நல்ல மொழி. ஆகமம் என்று மாத்திரம் சொல்லாமல் சிவ ஆகமம் என்று கூறியது அனாதியான ஒருவனுடைய வாயிலிருந்து வருவது என்பதைக் குறிக்கவே. வேதாந்தத் தெளிவே சித்தாந்தம் என்பது. வேதாந்தம், சித்தாந்தம் இரண்டும் ஒன்றுதான்; வேறல்ல. சிவப்பிரகாசத்தில் "வேதாந்தத் தெளிவாம்சைவ சித்தாந்தத் திறன்" என்று கூறப்பட்டிருக்கிறது. சிவநேசச் செல்வர்களே! சிவம் என்பதைப் பற்றி முதல், வழி, சார்பு நூல்களான சிவஞானபோதம், சித்தியார், சிவப்பிரகாசம் என்ற நூல்களைக்கொண்டு சொன்னேன். இனிச் சித்தாந்தம் என்பதுபற்றி ஒரு சிறிது கூறுவேன்.

சித்தாந்தம் என்பது சித்த - அந்தம் என்ற இரண்டும் சேர்ந்த சொற்றொடர். 'சித்த' என்பதன் முடிவில் 'அ' இருக்கிறது. இவ்விரண்டும் உயிர்கள். உயிர் உயிருடன் சேர்வதில்லை. மயிலும் சேவலுமாக இரண்டு உயிர் சேர்ந்து சண்முகப் பெருமானிடத்திலேயே இருக்கிறது. வேறு எங்கும் இல்லை. 'சித்' என்றால் 'கிடைத்த' என்று பொருள். பல நூல்களில் ஆராய்ந்து முடிவாகக் கிடைத்த முடிபே சித்தாந்தம். 'அறிதோறறியாமை கண்டற்றால்' என்று திருவள்ளுவர் படிக்கப் படிக்க அறியாமை வருகிறதென்கிறார். ஆசாரியன் ஆண்டவன் அருளைக்கொண்டு நமக்குக் கொடுக்கும் முடிபு. எல்லா முடிபுகளும் அதில் இருக்கவேண்டும். வேறு முடிபுகளை விரோதிக்கக் கூடாது. எந்த மத ஆசாரத்திற்கும் விரோதம் கூடாது. சித்தாந்தம் என்ற பதத்திற்கு சக்தி, இலக்ஷணம்,

தொனி என்ற மூன்று உண்டு. ஆற்றல், ஆகுபெயர், பிறகுறிப்பு என்று தமிழால் சொல்லப்படுகிறது. எல்லா முடிபுகளுக்கும் சித்தாந்தம் என்று சொன்னாலும் சைவ சித்தாந்தத்திற்கே சிறப்பாகக் கொள்ளப்படுகிறது. சித்தாந்தத்தில் ஆத்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவதத்துவம் 5 ஆக 36 தத்துவங்கள் இருக்கின்றன. தனித்தனியே 36 தத்துவங்களைச் சொன்ன வேறு சமயங்கள் இருப்பதாக அடியேனுக்குத் தெரியவில்லை. எல்லாச்சமயங்களும் சைவசமயத்தில் அடங்கியிருக்கின்றன. "இராஜாங்கத் தமர்ந்தது வைதிகசைவம்" என்று கூறியிருப்பது காண்க. எல்லாத்தத்துவங்களையும் தன்னகத்தேஅடக்கிக்கொண்டிருப்பது சைவசித்தாந்தம். அது சிறியகுறுகிய வழியில் செல்வதல்ல. 'சித்தாந்தவீதி வரும் தேவே பராபரமே' என்றார் தாயுமானாரும். "விரிவிலா அறிவினார்கள் வேறொருசமயஞ் செய்து எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்" என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு நோக்கற்பாலது. சிவஞான சுவாமிகளும், "எவ்வெவர் கோட்படுபொருளும் அஞ்செழுத்தி லடக்கி" என்று கூறியிருக்கின்றனர். நாஸ்திகம் முதலான எல்லா மதங்களுமே இச்சைவ சமயத்தி லடங்கியிருக்கின்றன. ஜைன அர்ச்சனையில் 'சிவாய நம' என்று சொல்லப்படுகிறது. 'சிவகதி' என்பது அவர்கள் மோட்சம்.

[சுவாமிகள் அத்வைதத்தின் உண்மைப் பொருளை விரிவாக எடுத்துரைத்து விளக்கினார்கள்.]

மெய்யன்பர்களே! இதுகாறும் வெளியிற் காணப்படும் பொருள்கள் தாழ்ந்தனவென்றும், அழியுந்தன்மைத்தென்றும், இதற்கெல்லாம் அப்பாற்பட்ட மேல்பொருள் ஒன்று உண்டென்றும், அதை நாம் ஆராயவேண்டும் என்றும், ஆராய்ந்து பெறவேண்டும் என்றும், அழுதே பெறமுடியும் என்றும், அன்பு முடிவாக அழ உள்ளே உள்ள வெள்ளப்பெருக்கு வெளிப்படும் பரவஸ்து தோன்றும் என்றும், அதுவே இடையில் வாராத அநாதியான சிவம் என்றும் சாஸ்திர, ஆசாரிய, ஈஸ்வர அருளால் கிடைப்பது சைவ சித்தாந்தம் என்றும், அதில் எல்லாச் சமயங்களுமே அடங்கியிருக்கின்றன என்றும் கண்டோம்.

மெய்யன்பர்களே! சைவ சித்தாந்தம் என்பதுபற்றி அடியேன் பேசினேன்; நீங்கள் கேட்டீர்கள். அடியேனைப் பேசுவித்தவன்; உங்களைக் கேட்பித்தவன் நம்முடைய ஆண்டவனல்லவா? அவனுக்கு நாம் நன்றி செலுத்தல் வேண்டாமா? என்ன நன்றி செய்யப் போகிறோம்? அவனைத் தியானிப்போம்; துதிப்போமாக.

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே."

---

உ

# கற்றோர் காண்பொருளும் ... ... மற்றோர் காண்பொருளும்.

(சென்னை, தமிழாசிரியர், திரு. A. தம்பிரான் முதலியாரவர்கள்)

உலகத்திலுள்ள பொருள்களைக் கற்றறிந்த புலவர் ஒருவர் காண்பதற்கும் ஏனையோர் காண்பதற்கும் வேற்றுமை மிகவும் உண்டென்பது அறிவுடையோர் கண்ட உண்மையாகும். ஏனையோர்க்குச் சாதாரண பருப்பொருள்களாகவே தோன்றும் உலகியற் பொருள்கள் அனைத்தும் மன அறிவும் வலிமையும் நிறைந்து நிற்கும் புலவர்கள் மனத்தில் மாண்புடைய கருத்துக்களையும் எண்ணங்களையும் என்ஞான்றும் எழுப்பும் நுண்பொருள்களாகவே தோன்றும். மன நினைவின் ஆற்றல் மிகவும் பெரிது. அணுவை ஒரு நொடிப் பொழுதில் மலைபோலப் பெருக்கச் செய்யும். மலையை மறு நொடியில் ஓர் அணுவினுங் குறியதாகச் செய்யும். அன்றியும், அசைவின்றி ஓரிடத்திலிருந்துகொண்டே பல காவதத்திற் கப்பாலுள்ள காசி, லண்டன், நியூயார்க்கு முதலிய பலவிடங்கட்கும் விரைந்தேகித் திரும்பும் ஆற்றல்வாய்ந்தது. இங்ஙனம் வியப்பான இயல்பினையுடையமனநினைவினைக் கற்றறிந்த புலவர் அடிக்கடி பண்படுத்தி அவ்வாற்றலைப் பெருக்குகின்றார். ஆனால் ஏனையோர் அவ்வாறு செய்யாமல் வாழ்நாளைக் கடத்துகின்றனர். ஒரு புலவன் ஒரு பொருளைக் கண்ட வளவிலே அதைப் பலவகையானும் ஆய்ந்து சிந்தித்து உணர்கிறான். உணர்ந்து உவமித்துத் தெளிகிறான், இங்ஙனம் பலஉண்மைகளை நிறுவுகிறான்.

நறுமணங் கமழும் இனிய சோலையில் செல்லும் ஒருவன் அதன்கண் மலிந்து கிடக்கும் பலவகை மலர்களின் அழகைக் கண்டு மகிழ்வான். அப்பூக்களில் நின்று வீசும் மணத்தை நுகர்ந்து இன்பமடைவான். அப்பூக்களில் வண்டுகள் ரீங்காரம் செய்யும் ஓசையைக் கேட்டின்புறுவான். அழகிய பலநிறங்களமைந்த தோகையைவிரித்தாடும் மயிலினங்களைக்கண்டு வியப்பான். ஆனால் ஒரு புலவன் அந் நந்தனவனத்தில் செல்லுவானானால் ஆண்டு மலிந்துகிடக்கும் மலரையும், மலரின்மீது பண்ணமைந்த இசை பாடும் வண்டையும், அம்மலர்ச் சோலையில் அழகிய தோகை விரித்தாடும் மயிலினங்களையும் கண்டவளவில் உலகப் படைப்பில் இறைவனது திருவருள் திறத்தையும், பேராற்றலையும் நினைந்து நிற்பான். அன்றியும் அம் மலர்களிடையே கமழும் மணம், வண்டு பாடும் பண், மயிலாடும் அழகு இவைகள் யாவும் இறைவனுடன் இரண்டறக்கலந்த ஆன்றோர் தன்மையே என்று காண்கிறான்.

மேனாட்டுப் பேரறிஞர் சர் ஐசாக் நியூட்டன் என்பார் ஒரு மரத்தடியில் படுத்திருந்தபோது அம்மரத்தினின்றும் ஓர் பழம் கீழே விழுவதைக்

கண்டு அவருக்கு ஓர் வியப்புண்டாயிற்றாம். "மரத்தில் கனிந்த பழம் மேனோக்கி வானையடையாமல் கீழ்நோக்கி நிலத்தை யடைவானேன்?" என்ற ஐயம் அவருள்ளே உண்டாகிப் பின்னர் நெடுநாள் ஆராய்ச்சியினால், 'பூமி எப்பொருளையும் தன்னகத்தே ஈர்க்கும் ஆகர்ஷண சக்தி' எனும் ஓர் வன்மை பெற்றுள்ளது என்ற அதன் உண்மையை யூகித்து அறிந்தார். ஆனால் அதே மரத்தடியில் வேறொருவன் செல்லுவானானால் மரத்தினின்று பழம் கீழே விழுதலைச் சர்வ சாதாரணமாக எண்ணிவாளா ஏகுவனன்றோ. மேனாட்டு மற்றோர் பேரறிஞராகிய ஜேம்ஸ்வாட் என்பவர் அடுப்பின் மீது வைத்திருந்த உலைப்பானையினின்று வெளிவந்த நீராவியைக் கண்டு அதன் வன்மையைத் தெளிந்து பின்னர் நீராவி இயந்திரங்களாலியங்கும் புகைவண்டி முதலியவைகளைக் கண்டு பிடித்தார். இந்நிகழ்ச்சியை நம் வாழ்க்கையில் நாளும் கண்டும் ஒருவித எண்ணமும் நம்முள் எழவில்லை. அமெரிக்காப் பெரியாராகிய தோமஸ் ஆல்வா எடிசன் என்பார் தனது ஆழ்ந்த ஆராய்ச்சியினால் மின்சாரத்தைக் கண்டு பிடித்து அதன் உபயோகத்தை யறிந்து மின்சார விளக்கு, மின்சாரவண்டி, கிராமபோன், டெலிபோன், தந்தி, சினிமா முதலிய பல கருவிகளை உலகிற்கு உதவியது பெரிதும் பாராட்டதக்க தொன்றாம். மற்றொரு அமெரிக்கா மாநாற் பேராசிரியர் லூதர்பர்பாங்ச்—செடி கொடிச்சித்தர்—அழகற்ற, சுவையற்ற, நல்ல நிறமற்ற இலை, பூ, பழம் முதலியவைகட்கு அழகு, நல்லசுவை, நல்ல நிறம் முதலியன கொடுத்துத் தாவர வகைகளில் பல புதிய இனங்களைப் படைத்து "உழைப்பின் வாரா உறுதிகளுளவோ" என்ற முதுமொழிக் கிலக்காய் விளங்கியது உலகம் போற்றற்குரியதாகும்.

இவ்வாறே நம் வடஇந்தியாவில் வங்காள மாகாணத்தில் விக்கிரமபுரியில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து உலகமெல்லாம் போற்றும் பௌதிகவியற் கலைஞராகி நம் நாட்டிற்குப் பெரும் புகழை நாட்டிய சர்-ஜகதீச சந்திரபோஸ் மானு செடி கொடிகளின் உயிர் விளக்கத்தையும் உணர்ச்சியையும் நாம் கண்ணால் கருவியின் மூலம் பார்ப்பதற்கு எண்ணி முயன்று "கிரிஸ்கோகிராப்"என்னும் கண்ணாடி இயந்திரத்தைக்கண்டுபிடித்தஅதிசயத்தை நினைக்குந்தோறும் அளவிலா மகிழ்வுண்டாகின்றதன்றோ. மற்றும் நம்தமிழ்நாட்டுப் பண்டைப் பெரும்புலவரும் உயர்ந்த உண்மையை வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்களுள் தலை சிறந்தவராய ஆசிரியர் திருவள்ளுவனாரை ஈண்டு நினைப்பாம். காக்கையைக் காணும் ஒருவன் அது கறுநிறங் கொண்ட ஓர் பறவை யென்று அறிகிறான். ஆனால் மனவன்மை பெற்ற புலவன் ஒருவன் அதைக் கண்டாங்கு 'காக்கையிற் கரிது களம் பழம்' என்று அதன் நிறத்தை உவமித்துத் தெளிகிறான். மற்றும், காகம் தான் உண்ணும்போது தன் இனத்தைக் கூவியழைத்து, மற்றைய காக்கைகளுடன் கலந்து உண்ணாமல் தனித்து ஒருபோதும் உண்பதில்லை என்ற அதன் தன்மையை,

> காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
> அன்ன நீரார்க்கே உள.



என்று திருவள்ளுவர் சிறப்பித்துக் கூறினார். தலையினின்றும் மயிர் சுடுபட்டுக் கீழே விழுவது நம் வாழ்க்கையில் நாம் நாடோறும் காணும் நிகழ்ச்சிகளிலொன்றாம். அந்நிகழ்ச்சியைக் காணும் நம்முள்ளத்தில் ஓரெண்ணமும் உண்டானதில்லை. இப்பொருளை உவமையாகக்கொண்டே ஆசிரியர் திருவள்ளுவனார்,

> தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை.

என்ற ஓர் உண்மையை வெளியிடுகின்றார். இக்குறளைச் சிறிது ஆராயுங்கால் மாந்தர் தமது அரிய பிறப்பிற்குரிய நல்லொழுக்கத்தில் தவறாதவர்களாய்த்தமக்குரிய நிலைமையில் பிறழாது இருப்பார்களேயாமானால் எல்லோராலும் புகழ்ந்து போற்றப்படுவர். அவ்வாறில்லாமல் ஒழுக்கம் நிலைமை இவைகளினின்று சிறிதேனும் தவறுவார்களானால் எல்லாராலும் இகழ்ந்து தூற்றப்படுவர். இஃது எவ்வாறெனில் தனக்குரிய இடமாகிய தலையில் மயிர் இருக்கும் வரையில் நறுமணம் கமழும் தைலமிட்டு நன்மலர் சூடித் திகழும். ஆனால் அந்நிலையினின்று தவறிக் கீழேவிழுமானால் தனது சீரும் சிறப்பும் வனப்பும் இழந்து காலால் மிதியுண்டு புழுதியில் அழுந்தி விளக்குமாற்றால் வெளியே தள்ளுதற்குரிய தன்மை எய்துமன்றோ.

ஒருவன் மானத்தைக் காக்கும் ஆடை அவிழ்ந்துவிடுமாயின் அவ்வாடையை விரைந்துசென்று கட்டக் கைக்கு ஆணையிடுவார் ஒருவருமிலர். அரையிலணிந்துள்ள ஆடைநெகிழ்வதனால் அவ்வரைக்குவந்த மானத்தைத் தனக்குற்றதேபோல் நினைந்து கையானது வலிந்து விரைந்து சென்று உடையை உடுத்து மானங் காக்கிறதன்றோ. இஃது நாடோறும் நிகழும் நிகழ்ச்சிகளிலொன்றாகும். இந்நிகழ்ச்சியினின்று நம் உள்ளத்தில் ஒருவித எண்ணத்தையும் நாம் கொண்டோமில்லை. ஆனால் ஆசிரியர் திருவள்ளுவனார் இதனை உவமையாகக் கொண்டே,

> உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
> இடுக்கண் களைவதாம் நட்பு,

என்று நட்பின் திறத்தினை நன்றாக எடுத்துரைத்தார். உடல்வேறு, உடல் உறுப்பாகிய கைவேறு என்ற வேற்றுமை சிறிதுமின்றி மெய்க்குற்ற மானம் தனக்குரியதென்று கைகாப்பதுபோல ஒருவன் இடர்ப்படுங்கால் அவனுக்குற்ற இடர் தனக்குற்றதாகத் தானே அவனை வலிந்து விரைந்து சென்று அவ்விடரைக் களைதலே ஓர் நண்பனது தன்மையாகும்.

இவ்வாறே உலகில் ஒவ்வொருவருங்காணும் நிகழ்ச்சிகளைக்கொண்டே, இயற்கைப் பொருள்களைக் கொண்டே ஆசிரியர் அனேக உயரிய உண்மைகளைத் தெளிவாக விளக்கியுள்ளார். ஆகலின் இவைகள் எல்லாவற்றையும் ஆராயுங்கால் உலகப்பொருள்களைக் கற்றறிந்த ஒருவன் காண்பதற்கும், மற்றையவர் காண்பதற்கும் வேற்றுமை மிகவும் உண்டென்பது தெளிவாக விளங்குகிறதன்றோ.

---

உ

# திருக் கயிலாயகிரி யாத்திரை.

(ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்தில் ஸ்ரீ சித்பவாநந்த சுவாமிகள் எழுதியது)

(சிவநேசன், 56-ம் பக்கத் தொடர்ச்சி)

"மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
யுள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.
வானத்தார் போற்று மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத் தீயாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருக்கயிலாயகிரி மேலைத்திபேத்தில் மண்ணுலகுக்கு ஓர் ஆபரணம் போன்று மிளிர்ந்து கொண்டிருக்கிறது. இந்தியாவினின்று இதை நோக்கிச் செல்லுதற்கு வழிகள் பல இருக்கின்றன. வடமேற்குத்திசையில் காஷ்மீரம் எனும் ஹிந்துசமஸ்தானத்துக்குத் தலைமைப் பட்டணமாயுள்ள ஸ்ரீ நகரத்தினின்று கிழக்குமுகமாக யாத்திரை செய்து திருக்கயிலாயம் போய்ச் சேரலாம். மற்ற வழிகளையெல்லாம்விட இது மிகத் தூரமானது. காஷ்மீரத்திலிருந்து போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலொழிய இப்பாதை யாத்திரை வாசிகளுக்கு அவசியமானதன்று. டெஹ்ரி சமஸ்தானத்தில் கர்வால் எனும் இடத்திலிருந்து வேறு ஒரு மார்க்கம் உண்டு. சிம்லாவினின்றும் ஒரு பாதை கயிலைக்குப் போகின்றது. கங்கை நதி உற்பத்தியாகும் இடமாகிய கங்கோத்ரி எனும் ஸ்தலத்தினின்று நீலக்கணவாய் வழியாக இன்னொரு பாதையுண்டு. பத்ரி



காஸ்ரமத்திலிருந்து மானக்கணவாய் வழியாக மற்றொரு ரஸ்தா போகின்றது. அந்த மார்க்கத்தில் தொலிங்கமடம் எனும் திபேத்திய பௌத்த மடாலயம் ஒன்று உண்டு. அது மிகப் பிரசித்தி பெற்றது. பத்ரிகாஸ்ரமத்துக்குக் கீழே சுமார் இருபது மைல் தூரத்தில் ஜோதிமடம் எனும் க்ஷேத்திரம் இருக்கிறது. இது ஜகத்குரு ஆதி சங்கராசாரியர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த மடத்தினின்று வேறு ஒரு பாதை நீதிக் கணவாய் வழியாகக் கயிலையங்கிரிக்குப் போகின்றது. இதுபரியந்தம் சொல்லப்பட்டவைகள் பெயரளவில் மாத்திரம் பாதைகளாகின்றன. பிரயாணத்துக்கு அவைகள் வசதியானவைகளன்று. மலைப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு இவை பொருந்தும். செங்குத்தான கற்களின் மீது தொத்தியேறுவதும் தவழ்வதும் அவர்களுக்கே இயலும். சமதரையில் நடப்பது போன்று அவர்களுக்கு அது பிறவிப் பழக்கம்.

திருக்கயிலாயத்தைக் காண விரும்பும் நம்மவர்கள் அல்மோராவினின்று புறப்பட்டு லிப்புத் தடாகக் கணவாய் வழியாகப் போவதே நன்று. மற்ற மார்க்கங்களில் இருக்கின்ற அளவு இதில் ஆபத்து இல்லை. மிகக் குறைந்த தூரம் உடையதும் இதுவே. லிப்புத் தடாகக் கணவாய் கயிலாய பூமிக்கு வாயில் போன்று இருக்கிறது. குளிர் காலத்தில் இது பனிக்கட்டியால் அடியோடு மூடப்படுகிறது. அப்போது திபேத்துக்குள் நுழைவது சாத்தியமன்று. இளவேனிற் காலத்தில் பனிக்கட்டி உருக ஆரம்பித்து, முதுவேனிற் காலத்தில் வழி ஒருவாறு திறக்கப்படுகிறது. கணவாயைக் கடந்து செல்ல வசதி ஏற்பட்டவுடனே திபேத்தினின்று வர்த்தகர்கள் இந்தியாவுக்குள் வர ஆரம்பித்து விடுவார்கள். அச்செய்தி அல்மோராவுக்கு எட்டியதும் யாத்திரை வாசிகள் கயிலையை நோக்கிப் புறப்படுவார்கள். ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மூன்று மாதங்களே இந்த யாத்திரைக்குத் தகுந்த பருவம்.

முன்னே பிரயாணம் செய்தவர்கள்கொடுத்தபுத்திமதியின்படி பொருள்களைச் சேகரிக்க எங்களுக்குச்சுமார் ஒருமாதம் பிடித்தது. இமயமலையினுள் போகும்போது உருளைக்கிழங்கும் வெங்காயமும் நீங்கலாகக் காய் வகைகள் ஒன்றும் அகப்படாது. திபேத்தில்

விளைபொருளே இல்லை. ஆதலால் வற்றல், மசாலைத்தூள் முதலியவைகள் தென்னிந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டன. அவரவருக்கு இஷ்டமானவைகளும் நெடுநாளைக்குக் கெடாது இருக்கக்கூடியவைகளுமான பக்ஷணங்களும் தயாரிக்கப்படவேண்டும். மாங்காய்வற்றல் மருந்துக்கு ஒப்பானது. அதன் அவசியகம் பின்னால் விளக்கப்படும். கம்பள உடைகளைத் தயாரிப்பதற்குத் தென்னிந்தியாவைவிட வட இந்தியாவே மிக வசதியானது. பனிகாலத்தில் குளிர் மிகவுடைய அப்பக்கங்களில் அவ்வுடைகள் மலிவாக அகப்படும்.

எங்கள் கூட்டத்தைச் சார்ந்த ஒருவர் மேமாதம் 23-ம் தேதி கயிலாயம் போகின்றார் என்ற செய்தி அவருடைய நண்பர் ஒருவர் வீட்டிற்கு எட்டிற்று. செய்தியை எடுத்துச் சென்றவன் மோட்டார் வண்டியோட்டுபவன். பயணத்துக்குப் பத்து நாளைக்கு முன்பே அவன் செய்தியெடுத்துச் சென்றான். பிரயாணத்துக்கு உரிய மடக்குக் கட்டில் (Camp Cot) ஒன்று அவ்வீட்டினின்று கொண்டுவரும்படி அவனுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. அவனும் அவ்வாறே வீட்டில் உள்ளார்க்கு விஷயத்தை எடுத்தோதி, கட்டிலைத் தரும்படி வேண்டினான். திடீரென்று திரஸ்கரிப்பு சரமாரிபோல் வந்தது! திகைத்து நின்றான் மோட்டார் ஓட்டி! இத்துணை ஆட்சேபம் எதற்காகவென்று அவனுக்கு விளங்கவில்லை. "ஆம், அவர் கயிலாயம் போவது உண்மை" என்றான். "இந்த இளம் வயதில் ஏன் கயிலாயம் போகச் சொல்கின்றாய்!" என்று தடையும் திட்டும் திரும்பவும் ஆரம்பித்தன. இக்குழப்பத்துக்கு மூலகாரணம் சிறிது நேரத்துக்குள் வெளியாயிற்று. கயிலாயம் போவது என்றால் மரணமடைவது என்றும், அப்படி உயிர் விடுதற்குக் கட்டில் வேண்டப்படுகிறது என்றும் அவர்கள் அர்த்தம் பண்ணிக்கொண்டார்கள், இந்த யாத்திரையைப் பற்றிப் பெரும்பாலார் கொண்டுள்ள எண்ணத்துக்கு இது தக்கதொரு சான்றாகும்.

ஹிமாலயத்தின் அடிவாரம் சென்னையிலிருந்து சுமார் ஆயிரத்து எழுநூறு மைல் தூரத்தில் இருக்கிறது. பம்பாய் அல்லது கல்கத்தா மார்க்கமாகச் சென்றால் தூரம் இன்னும் கொஞ்சம் அதிகமாகும். நாட்டிற்கு நடுவே இருதயம் போன்று இருக்கிறது டெல்லி. நாலா பக்கங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான மைல்



தூரம் ஓடி அங்கு ரயில் வண்டிகள் வந்து சேருகின்றன. உடலெங்கும் உள்ள ரத்தக் குழாய்கள் இருதயத்தோடு இணைக்கப்பட்டிருப்பதுபோன்று இந்தியாவின் இருப்புப் பாதைகள் டெல்லியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. சென்னையிலிருந்து நாங்களும் அத்தலைமைப் பட்டணத்தின் வாயிலாகவே இமயத்தை நோக்கிச் சென்றோம்.

வடதிசையை நோக்கிப் பனிகாலத்தில் பிரயாணம் போகும்போது ஒருவிதமான அனுபவம்; வேனிற்காலத்தில் போனால் மற்றொருவித அனுபவம். இரவுதோறும் ஒரு பருவத்தில் குளிர் அதிகரிக்கிறது: இரவும் பகலும் மற்றொரு பருவத்தில் வெயில் பொறுக்க முடியாததாகின்றது. தென்னிந்தியாவின் வெப்பம் அவ்வளவு கொடுமையானதன்று. வடக்கே வெயிலும் அனற்காற்றும் சேர்ந்து மனிதனை வாட்டுகின்றன. ராஜபுதனப் பாலைவனத்தினின்று வீசும் அவ்வனற்காற்று பெரிதும் உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியது. உச்சி வேளைகளில் எல்லா உத்தியோகங்களும் நிறுத்தப்படுகின்றன. காலை பத்து மணிமுதல் மாலை நான்கு மணிவரையில் வீடுகளெல்லாம் அடைபட்டுக்கிடக்கும். மாந்தர் வீதிகளில் தலை நீட்டமாட்டார்கள், ஒவ்வொருவரும் ஒரு மண் கூஜாத் தண்ணீரும் ஒரு விசிறியும் தம்முடன் வைத்திருப்பர். விசிறியை வீச ஒரு கைக்கும், தண்ணீரைப் பானம் பண்ண மற்றொரு கைக்கும் ஓயாது வேலை இருந்துகொண்டே இருக்கும். பருகுகின்ற அவ்வளவு ஜலமும் எங்கே போய் மறைகின்றதென்று வியப்பு உண்டாகக்கூடும். அவ்வளவும் சூரிய வெப்பத்தால் சுவாசத்தோடு ஆவியாகப் போய்விடுகின்றது. அத்தகைய மாளாத வெயிலில் ரயில் வண்டிப் பிரயாணம் மட்டும் ஓயாது நடைபெறுகிறது. அக்னிப் பிரவேசம் என்று அதைச் சொல்வது தகும். கயிலையை நோக்கிப் புறப்படுவது முதிர்வேனிற் காலமாதலால் வெந்தழலுக்கு ஒப்பான அவ்வெக்கையினின்று தப்பிக்கமுடியாது. பயணத்தில் எடுத்த எடுப்பில் உண்டாகும் முதற்சோதனை இதுவே.

பழங்காலத்து யாத்திரைமுறைக்கும், இப்போதைய யாத்திரைமுறைக்கும் இடையே உள்ள வித்தியாசம் தெற்றென மனக்கண்ணெதிரே தோன்றுகிறது. அக்காலத்தில் கால்நலிய உடல்நலியநாள்

ஒன்றுக்கு மனிதன் பத்து அல்லது பதினைந்து மைல் போவான். இக்காலத்தில் வாயுவேகத்துக்கொப்ப ரயில்வண்டி மனிதனைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறது. குறுகிய காலத்தில் நீண்டதேசம் சிரமமின்றி இக்காலத்தில் கடக்கப்படுகிறது. இவ்வாறு ஏற்பட்டுள்ள வசதிக்கு மற்றொருவிதத்தில்மனிதன் ஈடுகொடுக்கவேண்டியதாயிற்று. மனிதனோடுமனிதன் இணங்குதற்கு இங்குஅவகாசமில்லை. பணம்கொடுத்தால், வேண்டும் பொருள்கள் கைக்கு வந்துவிடுகின்றன. வேற்றாக யாருடனும் பழகாது மனிதன் தேசமெங்கும் சுற்றிப்பார்த்துவிட்டு வந்துவிடுகிறான். பண்டைக் காலத்தில் பணம் பெரிதும் பயன்படவில்லை. தீர்த்தயாத்திரை போகின்றவர்கள் அக்காலத்தில் பணம் எடுத்துக்கொண்டு போவதில்லை. ஆங்காங்கு அவர்களுக்கு அதிதி சத்காரம் செய்யப்பட்டது. யாத்திரை வாசிகளுக்கு விருந்தோம்புதல் புண்ணிய கருமமாகக் கருதப்பட்டது. அதற்குப் பிரதி பலனாகத் தீர்த்தயாத்திரை போகின்றவர் உயர்ந்த கருத்துக்களை எங்கும் பரப்பிக்கொண்டே போயினர். மிக மெதுவாக எனினும் யாத்திரை வாசிகளின்மூலம் மேலான எண்ணங்கள் நாடெங்கும் எடுத்துச் செல்லப்பட்டன. சௌகரியமான பிரயாணச் சாதனங்கள் இன்றி, சமாசாரப்பத்திரிகையின்றி, தபாலின்றி, தந்தியின்றிச் சீரிய கொள்கைகள் தேசமெங்கும் எடுத்து வழங்கப்பட்டன. அக்காலத்திய யாத்திரை முறையே அதற்குக் காரணமாயிற்று.

மாறுபட்டிருக்கும் இக்காலத்திலுங்கூட பாரதகண்டத்தின் பெருமை படிப்படியாகக் கண்ணெதிரே கொணரப்படுகின்றது. நெடுந்தூரம் தொடர்ந்து ஓடும் ரயில் வண்டி காலையில் ஒரு மாகாணத்தில் இருந்தால் மாலையில் மற்றொன்றுக்குப் போய்விடுகிறது. வண்டிக்குள் வரும் பிரயாணிகளின் நடையுடை பாவனைகள் விதவிதமாகக் காட்சி கொடுக்கின்றன. கடித்த தேகத்தையுடைய தெலுங்கு தேசத்தவர், உயர்ந்து ஒல்லியாயுள்ள ஐதராபாத் வாசிகள், திடகாத்திரமுடைய மஹாராஷ்டிரர், கட்டையராகிய கூர்ஜரத்தார், மெல்லியராகிய மத்திய மாகாண வாசிகள், துடுக்குடைய ஐக்கிய மாகாணத்தவர், இன்னும் பலவிதமான பாங்குடையவர் ரயில் வண்டிக்குள் வருவதையும் போவதையும் காணலாம். ஒவ்வொரு மாகாணத்தவருக்கும் தனி இயல்பு ஒன்று இருப்பது தெற்றெனத் தோன்றுகிறது. ஆயினும் இவர்கள்



அனைவரிடமும் இந்தியர் என்கிற முத்திரை மேலோங்கி மிளிர்கின்றது. சைவம், வைஷ்ணவம், சாக்தம் ஆகிய சமயங்கள் இந்தியா முழுதிலும் ஒரேவிதமாய் ஊடுருவிப் பொலிவதைத் தேசமக்களின் நெற்றியலங்காரங்கள் காட்டா நிற்கின்றன. புண்ணிய நதிகளையோ கணக்கற்ற கோவில்களையோ காணுமிடத்து அவர்களுடைய கை குவியவும், தலைவணங்கவும் செய்கின்றன. பாஷை வேறுபாடுகளுக்கிடையில், பழக்க வழக்க வேறுபாடுகளுக்கிடையில் இந்தியர் உள்ளத்தில் ஊறும் தெய்வீக உணர்ச்சி என்றைக்கும் ஒன்றே என்பது வெளிப்படை.

இயற்கையாயமைந்த நாட்டின் வளம் ஒப்பற்றது. முன்னேற்ற மடைந்துள்ள மற்ற நாடுகளில் போன்று இங்குப் பூமி பண்படுத்தபடவில்லை. அப்படியிருந்தும் நிலவளம் போற்றத்தக்கதாயிருக்கிறது. ரயில் வண்டி பறந்தோடுதற்கிடையில் கழனிகள், கால்வாய்கள், தோப்புகள், துரவுகள் விதவிதமான வர்ணம் தீட்டிய படங்கள் போன்று காட்சி கொடுக்கின்றன. வேனிற்காலத்தில் இத்தகைய எழில் என்றால் மாரி காலத்துக்குப் பிறகு இது எவ்வாறிருக்கும்! பாரதகண்டத்தை ஓர் எல்லை கடந்த பூமி என்று சொல்லவேண்டும். மாந்திரிகத்தாற்போன்று கணந்தோறும் காட்சிமாறுகிறது. இப்போது எல்லைகாணாத ஒரே சமவெளியில் ரயில்வண்டி பாய்ந்தோடுகிறது. ஜாலத்தால் சிருஷ்டிக்கப்பட்டது போன்று திடீரென்று ஒரு பட்டணம் தோன்றுகிறது; இரைச்சல் நிறைந்த ரயில் நிலையம் வருகிறது. பழையபடி சமவெளி, அல்லது மேடு பள்ளம் நிறைந்த நிலம். பின்பு அடர்ந்த அடவி வருகிறது. வண்டியின்வேகத்தால் மரத்திரள் அலையலையாகப் பின்புறம் உந்தித் தள்ளப்படுவனபோல் தோன்றுகின்றன. அசலமாயுள்ள மலைகள் நம்மை நோக்கி வருவனபோல் காட்சி கொடுக்கின்றன. பின்பு அவைகள் ரயில் வண்டியால் பின்பக்கம் உதைத்துத் தள்ளப்படுகின்றன. இப்படிக் கிழக்குத் தொடர்ச்சிமலை, விந்தியமலை முதலியவைகள் ஓட்டம் பிடிப்பவைகள்போல் காணப்படுகின்றன. கணப்பொழுதில் உயர்ந்தமலையொன்று உருவெடுத்து வந்து நிற்கிறது. அதன் அடிவாரத்தில் ரயில்வண்டி பூமியில் பட்டும் படாதது போல் உருண்டோடுகிறது. இப்போது மேடு ஒன்றில் புகையைக் கக்கிக் கர்ச்சித்துக்கொண்டு அது பறக்கிறது. திடீரென்று

இருள், காதைத் துளைக்கும் இரைச்சல், வண்டிக்குள் மட்டும் மின்சார விளக்கு. இதைக் கண்டதும் முதலில் திகைப்பு; பின்பு நீண்டதொரு மலை நுழைவு (tunnel) என்ற தெளிவு. பர்வதத்தைப் பொத்திக்கொண்டு போவதுபோல் வண்டித் தொடர் வெளியே வருகிறது; பிறகு பாலத்தின்மீது பிரமாண்டமான நதி ஒன்றைத் தாண்டி ஓடுகிறது. நவீன பௌதிகவிஞ்ஞான சாஸ்திரம் மனிதனுக்கு அளித்திருக்கும் வசதியை என்னென்பது! ஆனால் இதே வண்டித் தொடர் தீர்த்தயாத்திரை போகின்றவர்களுக்கும் உதவுகிறது; அக்கிரமமாக எளியார்மீது யுத்தத்துக்குப் போகின்றவர்களுக்கும் உதவுகிறது. இத்தனை சௌகரியங்களையும் மனிதன் நல்வழியில் உபயோகிக்கத்தெரிந்துகொண்டால் இந்தப் பூலோகமே சுவர்க்க லோகமாகுமன்றோ!

புண்ணிய நதிகளாகிய கிருஷ்ணை, கோதாவரி, நர்மதை, யமுனை, கங்கை முதலியவைகள் ஒன்றின்பின் ஒன்றாகக் கடக்கப்படுகின்றன. அவைகளைக் காணுந்தோறும் பண்டைக் காலத்து இந்தியா கண்ணெதிரே வந்து காட்சி கொடுக்கிறது. இந்நதிகள் வெறும் நீர்ப் பெருக்காகக் கருதப்படவில்லை. உயிருடன் இலங்கி உலகுக்கு உணவு ஊட்டும் பராசக்தியின் வடிவென இவைகள் எண்ணப்பட்டன; அதே பாவனைதான் ஹிந்துக்களுக்கிடையில் இன்றைக்கும் இருந்து வருகிறது. இந்தியாவின் நாகரீகம், சீரிய எண்ணங்கள், முடிவான ஞானம் ஆகிய யாவும் உதித்தது இப்புண்ணிய நதித் தீரங்களிலேயாம்." உடலுக்கு உணவையும் உள்ளத்துக்கு ஞானத்தையும் அளித்தபெருமை இந்நதிகளுக்கு உண்டு. இவைகளில் ஓயாது நீர் ஓடுவதுபோன்று காலமும் ஓடுகிறது; மாந்தரும் உலகில் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருக்கின்றனர். ஆனால் இங்கு உதித்த பாரமார்த்திகப் பெருவாழ்வு மட்டும் அழியாது நிலைத்திருக்கிறது. பூவுலகு இருக்கும் பரியந்தம், பூவுலகில் இந்தியா இருக்கும் பரியந்தம், இந்தியாவில் ஹிந்துக்கள் இருக்கும் பரியந்தம் இந்நதிகள் பூலோக தேவதைகளெனப் போற்றப்படும்.

ஓடும் ரயில்வண்டியிலிருந்துபார்ப்பவர்களுக்கு இடையிடையே பாழ்ங்கோட்டைகளையுடைய குன்றுகள் தென்படுகின்றன. சூரிய அஸ்தமனம் அக்காட்சிக்கு ஒருவிதத் துன்பமுலாம் பூசுகிறது.



இடைக்காலத்துச் சிற்றரசர்களைப் பற்றிய எண்ணம் இயல்பாகவே வருகிறது. அவர்களிற் பலர் பராக்கிரமசாலிகள். பொதுநன்மையின் பொருட்டு ஒத்துவாழத் தெரியாமையே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. தேசமும் பராதீனத்துக்கு உள்ளாயிற்று. பிளவுபட்ட வாழ்வு எனும் ஒரு மொழியில் இடைக்காலத்து இந்திய சரித்திரத்தை முடித்துவிடலாம். அந்த எண்ணமே மனதைத் துயரத்தில் தள்ளுகிறது.

க்ஷேத்திரங்கள் பலவற்றைப் போகும்வழியில் தங்கித்தரிசிக்கலாம். ஆனால் குறிப்பிட்ட காலத்தில் திருக்கைலாய யாத்திரையை அல்மோராவினின்று துவக்கியாகவேண்டும். ஆதலால் உத்தரகண்டத்தை நோக்கிப் போகும்போது அதற்கெல்லாம் நேரமில்லை. வேனிற் காலமும் அதற்கு அவ்வளவு வசதியானதன்று. திரும்பி வரும்போது மாரி காலத்தில் ஸ்தலங்களை வேண்டியவாறு கண்டு களிக்கலாம். கம்பள உடைகளிற் சிலவற்றை டெல்லியிலும், இன்னும் சிலவற்றை அல்மோராவிலும் சேகரிக்கவேண்டும் அதற்காக இரண்டொருநாள் டெல்லியில் தங்குவது அவசியம். சகிக்கமுடியாத அந்த வெயிலில் கம்பளஉடைகளை வாங்குவதற்கே மனது மறுதலிக்கிறது. ஆனால் இவ்வுடைகளையெல்லாம் மீறி உடலை உறுத்தும் குளிர் ஒன்று மலைநாட்டில் உண்டு என்பதை மனது அப்போது ஊகிப்பதில்லை.

டெல்லியினுள் ரயில் வண்டி நுழையும் போதே வேறு நாடு நகரங்களில் எங்கும்காண இயலாத அதிசயக்காட்சியொன்றைக் காணலாம். கணக்கற்ற அரசாங்கங்களின் இடுகாடாகவும், சுடுகாடாகவும் இருந்தது டெல்லி. சுமார் அறுபது சதுர மைலுக்குக் கோட்டைகளும், கொத்தளங்களும், இடிந்துபோன மாளிகைகளும், பாழடைந்த கல்லறைகளும், பாதுகாக்கப்பட்ட ஸ்தம்பங்களும் தென்படுகின்றன. இது கணக்கற்ற அரசாங்கங்களுக்குத் தலைமைப் பட்டணமாக இருந்தவாறு உலகிலேயே வேறு எப்பட்டணமும் இருந்ததில்லை என்கின்றனர் சரித்திரக்காரர். முடிசாய்ந்த மன்னர்களெல்லாம் முடிவில் ஒரு பிடி சாம்பலாய்ப் போயினர் எனும் உண்மையை இந்நகர் சொல்லாது விளக்கிக்கொண்டிருக்கிறது. இந்தியாவின் சரித்திரம் முழுதும் டெல்லியின் சரித்திரத்தில் அடங்கிவிடும் எனும் கூற்று ஒருவிதத்தில் உண்மை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அரசாண்டவர்களின் ஞாபகச் சின்னங்கள் இன்றைக்கும் தென்படுகின்றன. பாண்டவர்களுக்குத் தலைமைப்பட்டணமாயிருந்ததும் இவ்வூரே. அக்காலத்தில் இதற்கு இந்திரப்பிரசித்தம் என்றுபெயர். பாண்டவக்கோட்டை எனும் பெயர் பூண்ட, சிதறடைந்த கற்கோட்டை இன்றைக்கும் தென்படுகிறது. பாண்டவர்களை ஈன்றெடுத்த தாய் குந்திதேவியின்

கோயில் ஒன்று இதற்கு அருகாமையில் இருக்கிறது. அந்த ஐவரும் பூலோகத்தில் நிகழ்த்திய ராஜ்ய பரிபாலனமும் இதர காரியங்களும் ஹிந்துக்களுக்கு வாழ்க்கை சம்பந்தமான பெரியதோர் எடுத்துக் காட்டாக இருக்கின்றன. இறுதியாக அவர்கள் இப்பட்டணத்தினின்று கயிலையங்கிரியை நோக்கித் தீர்த்த யாத்திரை செய்தனர். டெல்லியைச் சுற்றிப்பார்க்கும்போது இவ்வெண்ணங்களெல்லாம் நம் உள்ளத்தில் எழுவனவாகின்றன.

ஒருநாள் மாலையில் டெல்லியிலிருந்து புறப்பாடு. நேரவேண்டிய இடத்துக்குத் தொடர்ந்து போகும் ரயில் வண்டியில்லை. மொராதாபாத், பரீலி எனும் இரண்டு பெரிய சந்திப்பு ஸ்டேஷன்களில் வண்டிமாற்றியாகவேண்டும். நாலாபக்கங்களிலிருந்தும் இரவும் பகலும் அந்த ஜங்ஷன்களுக்கு ரயில் வண்டிகள் பீறிட்டுக்கொண்டு பிளாட்பாரங்களுக்கு ஓடி வருகின்றன; கத்தி கர்ஜித்துக்கொண்டு வெளியேகுகின்றன. பிரயாணிகள் ஓயாது வருவதும் போவதுமாயிருக்கின்றனர். நடு இரவில் பரீலி ஜங்ஷனில் வண்டிமாற்றி, ஓர் இடைத்தரத் தண்டவாள வண்டியில் ஏறுகின்றோம். தென்னிந்தியா முழுதும் சுற்றும்போது ஒரே ஒரு ரயில்வே கம்பெனி நமக்குச் சேவை செய்வதாகின்றது. இந்த யாத்திரையில் நாங்கள் இப்போது ஆறாவது கம்பெனியின் வண்டியில் ஏறுகிறோம். இதற்கு முன் ஐந்து கம்பெனிகளின் இருப்புப்பாதைகளைக் கடந்தாய்விட்டது. இதற்கு ரோஹில்கண்டுகொமாயுன் ரெயில்வே என்றுபெயர். மற்ற வண்டிகளைக்காட்டிலும் சற்று மெதுவாகவே இது வடதிசையாகப் போகின்றது. இருளின் ஆதிக்கம் இன்னும் ஐந்தாறுமணி நேரம் இருக்கும். ஆதலால் நாங்கள் ஓடும் வண்டியில் சற்றுக் கண்ணயர்கின்றோம்.

விடியற்காலம் அணுகுகிறது. இத்தனைநாளாக இரவும் பகலும் உடலை உருக்கிய புழுக்கம் இப்பொழுது எங்கேயோ போய்விட்டது. இமயத்திலிருந்து இடையிடையே வரும் மெல்லிய பூங்காற்று மகிழ்வூட்டுவதாயிருக்கிறது. உடலின்மீது போர்வைபோட வேண்டிய அவசியமும் இப்போதுதான் வந்தது. மரம், செடி, கொடிகளெல்லாம் சூரியோதயத்தால் உள்ளபடி உருத்தரித்துக் கொண்டிருக்கையில் ஒரு வனத்திலுள் காத்கோடம் எனும் நிலயத்தில் ரயில்வண்டி வந்து நின்றது. அத்துடன் எங்களுடைய நீண்ட ரயில்வண்டிப்பிரயாணம் முடிவுபெற்றது. கீழே இறங்கியதும் வடதிசையில் மேல்மேற்காக நிற்கும் நீண்ட குன்று ஒன்று தென்பட்டது. உடனே மனதில் பெரிய ஏமாற்றம் உண்டாயிற்று. எங்கள் மனத்தில் எண்ணியதாவது: 'இதைவிடப் பெரிய மலைகள் தென்னிந்தியாவில் இருக்கின்றனவே! உலகத்திலேயே மிகப்பெரிய மலை என்பதன் அடிவாரம் இப்படித்தானா இருப்பது? வான் அளாவும் சிகரம் ஒன்றையும் காணோமே!' (வரும்)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பணி விண்ணப்பக் கவிகள்.

## ஸ்ரீலஸ்ரீ தருமபுர ஆதீன மடாதிபதி அவர்களுக்கு,

அமராவதிபுத்தூர், பரம்பரைத் திருப்பணிச்செல்வர்,

வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியார் அவர்கள்.

## அனுப்பிய கவிகள்.

(விபவ ஐப்பசி)

திருக்கயிலா யத்திருந்து வந்தபரம் பரையாகிச் சிவஞா னத்தின்
பெருக்ககலாத் தருமபுரத் தெழுந்தருளிப் பெரியர்குழாம் பெரிதும்சூழக்
குருக்கிளர்எம் சொக்கலிங்கம் பதந்தொழும்சுப் பிரமணிய குருவே நீநெஞ்
சிருக்கையிலெங் களுக்குமொரு குறைவருமோ சுகக்கடலில் இருக்கின் றேமால்.

துஞ்சாத புகழ்மதுரை மீனாட்சி யிறைசோம சுந்த ரேசர்க்கு
எஞ்சாத திருப்பணியைக் கால்கோடி பொருட்செலவால் இயற்றியுள்ளோம்
அஞ்சாத படியிருபத் தெட்டாண்டு கமிட்டியினில் அரசு செய்தேன்
செஞ்சாலி வயல்அமரா வதிபுத்தூ ரினிற்பிறந்து சிறந்துள்ளேனால்.

திருவாத வூர்கண்ட தேவிதிருப் பரங்குன்றம் திருப்புத் தூர்பொன்
ஒருவாத விருத்தகிரி திருவாப்ப னூர்ஒற்றி யூர்கே டென்றும்
மருவாத கானப்பேர் காமிவ டக்குஅமரா வதிமுன் னாகப்
பெருவாரி சிவஸ்தலங்கள் திருப்பணிசெய் தேம்தருமைப் பெருமை வேந்தே.

மாவடுவின் வகிரனைய கண்ணிசிவ காமிமண வாளன் செம்பொற்
சேவடியை நாடோறும் அன்போடு பூசிக்கும் சிறப்பு வாய்ந்த
ஆவடுதண் டுறைமடத்திற் கதிபதிஅம் பலவாணர்க் கன்பு பூண்டேன்
நாவடுவில் லாதசவி அ. இராம நாதன் என்பேர் நவில்வர் மாதோ.

நல்லவன மூலக்கருணைச் சௌந்தரநா யகிகேள்வன் நாடு போற்றும்
பல்லவன நாதனுறை பழங்கோயில் மிகப்புதிதாய்ப் பண்ணு வித்தேம்
தொல்லைவளம் பெறுந்தரும புரத்துறைசுப் பிரமணியத் தோன்றால் கட்டி
வெல்லமெனத் தகும்அடியேன் விண்ணப்பம் கேட்டருள வேண்டுமாதோ.

வேயூரும் பச்சிளந்தோட் கன்னிஅப யாம்பிகைக்கும் வேத மோதும்
மாயூர நாதருக்கும் குமரவே ளுக்கும்வையம் மதிக்கச் செய்த
தீயூரும் மறைவேள்விப் புகைமலியுங் கும்பாபி ஷேகங் கண்டு
மீயூரும் சடைமுடியோய் கூட்டத்துன் னையும்தொழுது மீண்டேன் மாதோ.

திண்ணியவெள் விடையூரும் திருக்கடவூர் மயானத்துத் தேவ தேவன்
புண்ணியநற் கும்பாபி ஷேகமுங்கண்டு உள்ளமிகப் பூரித் தேனால்

மண்ணியஒண் மணியனையாய் கயிலாசம் பிள்ளையெல்லாம் வழங்கக் கேட்டேன்
எண்ணியவா றுபசரித்தால் இன்னமிகச் சிறப்பாக விருக்கு மாதோ.

காவிரிதண் கடலோடு கலக்குமிடந் திருந்தமுக்கட் கடவு ளார்க்கும்
நாவிரியுந் தமிழ்க்கரசாம் அகத்தீசர் தமக்கும்மிக நயந்து செய்த
தீவிரியுங் கும்பாபி ஷேகமுங்கண் டேன்அதற்குச் சிரத்தை யோடு
நீவிரியும் படிஉய்த்த அபிஷேகத் திரவியந்தான் நிகழ்த்தற் பாற்றே.

பூதலத்தில் ஓர்இருநூற் றெழுபத்து நான்கென்னப் புகலுகின்ற
சீதளத்தண் பொழிற்பாடற் சிவதலத்திற் பெரும்பாலும் தெரிசித் தவ்வேன்
காதலித்துத் தொழும்இருபத் தேழுகின்கோ யிலும்பலகாற் கண்டு போந்தேன்
ஆதரவற் றுக்கிடக்கும் அவைகளை நான் நாவொன்றால் அறைய லாமே.

இடிந்ததிரு மதில்கள்தான் எத்தனையோ செடிகளின்வேர் இறங்கிச் சாய்ந்து
மடிந்ததிருக் குளங்கள்தா னெத்தனையோ வௌவாலின் மலத்தால் மேடு
படிந்ததிரு மாளிகைதா னெத்தனையோ சுதையெல்லாம் பாழா கிப்போய்
ஒடிந்தசிலை மலிந்ததிருக் கோபுரந்தா னெத்தனையோ உரைப்ப தம்மா.

இருட்டுகின்ற மண்டபந்தா னெத்தனையோ பத்தியுடன் இறைஞ்சு வாரை
வெருட்டுகின்ற கருங்காடுஞ் செடியும்நெரிஞ் சியும்முளைத்து விளக்கில் லாமல்
திருட்டுவினைக் காகின்ற பிராகார மெத்தனையோ ஜெகத்தைச் சுற்றி
உருட்டுகின்ற அருட்டிருச்சக் கரமேந்தித் தருமபுரத் துறையுந் தேவே.

பாராண்டு ஜெயங்கொண்ட சோணாட்டு வேந்தர்கள்கும் பாபி ஷேகம்
நீராண்ட சடையார்க்கு நாடோறுஞ் செய்தன்றோ நெடிது வாழ்வார்
சீராண்ட தருமபுரத் தரசேநின் கோயிலெலாந் திருந்தப் பண்ணி
ஓராண்டுக் கொவ்வொன்றாய்ச் செய்தாலும் கீர்த்திமிக ஓங்கு மாதோ.

கருமைக்கு வெள்ளையினைக் கரைத்தடித்து நீர்வண்ணங் காட்டிச் சும்மா
பெருமைக்குக் கும்பாபி ஷேகம்செய் வதுநின்போற் பெரியார்க் குண்டோ
இருமைக்கும் நலமாக வேதேனும் திருப்பணிசெய் தியற்றில் நன்றாம்
தருமைக்கு வேந்தேசுப் பிரமணிய குருவேசெந் தமிழ்வல் லோனே.

படமொன்றும் அரவசைத்த பரமர்திருக் கோயிலெல்லாம் பணிசெய் கின்ற
திடமொன்றும் நகரத்தார் மாயூரம் கும்பாபிஷேகந் தொட்டு
மடமொன்றும் அதிகார வரம்புள்ள கோயில்செய வரவே மாட்டார்
குடமொன்றும் முனியனையாய் தருமபுரத் தினைவாழ்வு கொண்ட தேவே.

பொருளைச்சே கரித்துவைத்த வீரப்பன் குபேரனையே போலுஞ் சீமான்
அருளைச்சே கரித்துவைத்த மாயூரம் கோயில்பணி ஆற்றி யன்றோ
இருளைச்சே கரித்துவைத்த கண்டர்அருட் சமாதியினில் எய்திவாழ்வான்
தெருளைச்சே கரித்துவைத்தோய் திருப்பணிபோல் உயிர்க்குறுதிச் செயல்
[வேறுண்டோ

ஆதலால் மீண்டும்உன் றடிகட்கு விண்ணப்பம் அறைவேன் நன்மைக்கு
ஈதலால் ஒருகுறைவும் எய்தாது வளஞ்சுரக்கும் என்பர் மேலோர்
காதலால் நின்கோயி லனைத்தையும்நீ யேதிருத்திக் காண்பாயானால்
ஈதலாற் புண்ணியமும் புகழும்வே றிலையாழிக் கிருப்பாய் மாதோ.

எண்ணற்கு மரியபுகழ் குமரகுரு பரமுநில்வந்து இறைஞ்சிப் போந்து
விண்ணிற்கு மரிதாய கவியமுதம் பொழிதருமை வேந்தே சேந்த
வண்ணப்பொன் னனையவடி வளகுருசுப் பிரமணிய வள்ளால் இந்த
விண்ணப்பங் கண்டருளி விரைந்துவிடை வரைந்தருள வேண்டு மாதோ.

என்போல்வார்க்கு அஞ்ஞான இருளகற்றி ஒளிபரப்பும் இரவியான
நின்போல்வார்க்கு ஒன்றைஎடுத் துரைத்திடல்உத் தமசீடர் நிலையன் றேனும்
மின்போல்வார் சடையுடையான் அபராதம் வருங்கொல்லென விண்ணப் பித்தேன்
பொன்போல்வார் செறிதரும புரத்தரசே குற்றமெனில் பொறுத்தாள் வாயே.

கருப்பறிய லூர்வேளூர் ஐயாறு நள்ளாறு காழி மாமன்
திருப்பறிய லூர் பனந்தாள் விழநகர்பே ரளம்எறிச் சென்றால் வெள்ளிப்
பொருப்பறியலாந் திருக்கற்குடி திருக்கோளிலிஆச்சாபுரம் குத்தாலம்
கருப்பனெரிபுகுங் கொறுக்கை திரிபுவனம் தருமபுரம் கடவூர் மன்னே.

கருங்குயிலு தன்கோயில் வள்ளலார் கோயில்மணங் கமழ்கா வெங்கும்
அருங்குயிலு தம்புரியும் திருநின்றி யூர்கடலின் அலைநீ ருண்டு
பெருங்குயிலுதஞ்செய்யும் திருமுல்லைவாயில் பொன்னிப் பெருநீர் வெள்ளம்
நெருங்கயில்சூழ் விசுவநா தன்கோயில் மணக்குடிபின் நிகழ்த்திடின் மாதோ

திருவாரூர் இராஜாங்கக்கட்டளை சென்றடையாத செல்வமோங்குந்
தெருவாரும் சிராப்பள்ளி மலைக்கோட்டைக் கட்டளையிச் செகத்தோர் போற்றுந்
திருவாரும் இடைமருதூர்ப்பிச்சைக் கட்டளைபொன்னித் தென்பால்மன்னி
மருவாரும்புகழ் மாயூரங்குமர கட்டளையும் வயங்கு மாதோ.

தருமத்தே விருப்புடைய தருமபுரவேந்தேமேற் சாற்றிவைத்த
இருபத்தேழ் கோயில்களும் இருபத்தேழ் தாரகையாய் இருப்பமிக்க
பருவத்தே தோன்றுகின்ற பூரணமாமதியாகிப் பாரிலுள்ளோர்
உருவத்தே வுடன்வைத்துப் போற்ற எல்லாத் திருப்பணியுந் தொடங்குவாயே.

என்பாட்டுக் கொருவிடையு மில்லாமற் கல்லாலினிறையே போன்று
நின்பாட்டுக் கிருந்தனையம் முனிவரைப்போற் குறிப்பறியும்நிலை யெற்குண்டோ
முன்பாட்டுச் சுவைகேட்க ஆருயிர்ந்தாருமுள்ளர் முளரிக்கோயிற்
றென்பாட்டு வண்டினங்கள் செறிபொழில்சூழ் தருமபுரத்தினில்வாழ் வோனே.

முற்றிற்று.

188962

உ

# திறப்புரை.

(வேலூரில், 1937 டிசம்பரில் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 32-ம் ஆண்டு நிறைவு விழாவில் மகாநாட்டுத் திறப்பாளர்,

திரு, கீ. நாராயணசாமி முதலியார் அவர்கள்)

பெருமாட்டிகளே! பெருமான்களே!

இம்மாபெரும் மகாநாட்டைத் திறந்து வைக்கும் பெருமையையும் பேற்றையும் எனக்கு அளித்ததற்காக, இதனை நடத்துவிக்கும்பெரியார்க்கு நான் பெரிதும் கடமையுள்ளவனாகின்றேன். எனது உளத்தினின்றும் ஊற்றெடுக்கும் நன்றி யறிதலை அவர்க்கு முதலில் தெரிவித்துக்கொண்டு மகாநாட்டைத் திறந்து வைக்கும் முறையில் சில சொல் கூற விரும்புகிறேன்.

## 1. தமிழர் பழமையும் சைவத்தின் தொன்மையும்.

இந்தியாவுக்குத் தெற்கே லெமூரியா என்று ஒரு கண்டம் இருந்த தென்பதைப் பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. இதனைத் தற்கால அறிவியல் அறிஞர் பலரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். தமிழ் மக்கள் அப்பெரு நிலப்பாகத்தில் வசித்திருந்தனர் என்றும், ஒரு பெரிய கடல் பெருக்கத்தினாலே அக்கண்டம் விழுங்கப் பெற்றதென்றும் பொருப்பான தமிழ் நூற்கள் சிலவும் கூறுகின்றன. ஆசியா கண்டத்தின் கடல் ஓரமாயுள்ள சுண்டா தீவுகளில் தொடங்கி, ஆப்பிரிகா கண்டத்துக் கீழ்க்கடலோரம் வரை இந்து மகா சமுத்திரமானது ஒரு பெரிய கண்டமாகப் பரந்து இருந்தது என்றும், அவ்விடத்தில் தான் மனித வர்க்கம் முதன் முதலில் தோன்றியிருக்கவேண்டுமாதலினால் அது மிக முக்கியமானது என்றும், ஆசிரியர் ஹெக்கல் என்பார் ஆராய்ந்து முடிபுகட்டுகிறார். தற்கால ஆராய்ச்சியின்படி மக்கள் பகுதியின் முதல் தோற்றம் உண்டான இடம் இந்துமகா சமுத்திரத்தின்கீழ் இப்போது அமிழ்ந்துகிடக்கும் நிலப்பரப்பே என்று மற்றொரு அறிவியல் அறிஞர் எழுதுகிறார். இவ்விடத்திலேயே மனிதத்தோற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதையும், மகாப்பிரளயத்திற்குப் பிறகு மக்கள் வசிக்கத் தொடங்கியதும், செடி கொடிகள் முளைக்கத் துவங்கியதுமான இடம் இந்தியாவே என்பதையும், சர் வால்டர்ராலே என்னும் ஆசிரியருடைய 'உலகத்தின் வரலாறு' என்னும் நூல் வலியுறுத்துகின்றது.

இன்றைக்கும், காமஸ்கட்கா, இதாலியிலுள்ள டஸ்கனி, நியூஜிலந்து முதலிய இடங்களிலே, மக்கள் தமிழ்மொழியை யொட்டிய ஒரு பாஷையையே பேசுகிறார்கள் என்பது கொண்டு, தமிழ் மக்கள்தான் உலக



மொத்தமும் பரவலானார்கள் என்பதை ஒருவாறு நிரூபிக்கலாம். இன்னும் பல காரணங்களும் காட்டப்பெறுகின்றன.

லெமூரியா கண்டம் கடல் கொள்ளப்பெற்றபோது தமிழ் மக்களில் ஒரு பகுதியார் படகுகளில் தப்பியோடி ஆப்பிரிகாகண்டத்தின் எல்லையை அடைந்தனர். அங்கிருந்து துலேலியிலுள்ள எரின் என்னும் இடம்வரை போயினர். பழைய பிரிட்டன் தேசத்திலிருந்து வந்த சிம்ரி என்னும் மக்கள் தொகுதியார் தமிழரே என்று கருதப்பெறுகின்றனர். இந்திய - ஆப்ரிக நிலத்திலிருந்து ஆப்ரிகா வழியாய் ஐரோப்பாவிற்கும், ஐரோப்பா ஆசியா இரண்டின் வழியாய் அமெரிக்காவிற்கும் சென்று, ஆதி மக்கள், அக்காலத்தில் குடி புகுதற்கு வசதியாயிருந்த பூபாகத்தின் மீது படர்ந்து கொண்டார்கள்; நீள வளர்ந்திருந்த நிலப் பரப்பு, கடலில் இறங்காமலே, ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவும் அவர்கட்குத் துணையாயிருந்தது என்று சாமுவேல் லெய்ங் என்பார் தமது 'மனிதனின் பழமை', என்னும் நூலிலே கூறுகிறார். இந்தக் கொள்கையை ஆதரித்து, 'தமிழ் இந்தியா' என்னும் நூலிலே பல மேற்கோள்கள் காட்டப் பெறுகின்றன.

கடலுக்குள் மறைந்த லெமூரியா கண்டத்திலே, குமரிநாடு என்னும் பாகத்திலே இருந்த மகேந்திரமலையே தமிழ்ப்பேரறிஞர்கள் வாழ்தற்குரிய இடமாக இருந்தது. அம்மலையின் கண்ணேயே நான்கு தமிழ் மறைகள் அல்லது தெய்வப்பனுவல்கள் என்பன, நான்குநீத்தார்க்குநல்கப்பெற்றன. இம்மறைகள் வேறு, பிற்காலத்துத் தோன்றிய வடமொழி நான்குவேதங்கள் வேறு என்பதைக் குறிக்கவே, அத் தமிழ்ப்பனுவல்கள் 'பண்டை நான்மறை' என்னும் பெயரால் வழங்கப்பெற்றன. இந்நான்கு மறை நூல்களும் கடல்கோள் வெள்ளத்திலே மறைந்தனவாயினும், அவற்றின் கண் பொதிந்திருந்த உண்மைகள், வாயினால்ஒருவர்க்கு ஒருவர்சொல்லியே, வழிவழியாக வழங்கப்பெற்று வந்தன. திராவிடப் பெரியார்களது பாடல்களிலும் நூல்களிலும் அவை இன்றைக்கும் மிளிர்ந்துகொண்டிருக்கின்றன.

லெமூரியாவிலும், தென்னிந்தியாவிலும்வதிந்துவந்த தமிழ்மக்களது சமயக்கொள்கை, சைவ சித்தாந்தக் கொள்கையேயாகும். எனவே, தமிழர்களது நான் மறையின் கருத்தே பண்டைய உலகம் அல்லது அந்த உலகத்தின் ஒரு பகுதியினது தத்துவக்கருத்தாகும். படகுகளின் துணைகொண்டு ஐரோப்பாவிற்குத் தப்பி ஓடிய மக்கள் இக்கருத்துக்களடங்கிய மறைகளைத் தங்களோடு கொண்டு சென்று பண்டைய உலகத்தினுக்கு அடிகோலியிருப்பார்கள். பின்னர் அக்கருத்து மற்ற நாடுகளுக்கும் பரவியிருத்தல் வேண்டும்.

தப்பியோடிய தமிழ் மக்களில் சிலர் பழைய பிரிட்டன் தேசத்திற்குச் சென்று குடியேறினவர். அவர்கள் இக்கொள்கைகளை அந்நாட்டிற்குக் கொண்டு போயிருத்தல் வேண்டும். பண்டைய பிரிட்டிஷ் மக்களின் கொள்கை சைவ சித்தாந்தமே என்றும், அவர்களது சமயம் சைவசமயமே என்றும் சொல்வதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. இதுபற்றிக் கடைசியாக வந்துள்ள நூலின் பெயர் "பழைய பிரிட்டிஷாரது சமயம் சைவ சமயமே" என்பதாகும்.

அக்காலத்திலே ஐரோப்பாவிலே வதிந்த மக்கள் சமயம் இன்னது, சமயக்கொள்கை இன்னது என்று அறியவேண்டுமானால், கிரேட்பிரிட்டன் நாட்டின் வசித்துவந்த 'ட்ரூயிட்' என்னும்மக்களையே அணுகுவதுவழக்கம். பிளாட்டோ என்னும் பெரியாரது கொள்கைகளுக்குப் பெரும்வழி காட்டியாகிய பிதா காராஸ் என்னும் பேரறிஞர் பிரிட்டன் நாட்டு ட்ரூயிட் மக்களைச் சென்று காண்பார்; அவர்களைத் தம்மிடத்திற்கு வரவேற்று அளவளாவுவரர். அவ்வழியாக அவர்களிடமிருந்தேதமது கொள்கைகளுக்கு அவர் அடிகோலிக்கொண்டார்; ஆர்வமும் ஆற்றலும் பெற்றார். மெர்சன் என்னும் பெருந்தகையாரால் பலபடப் புகழ்ந்து பேசப்பெறும் தத்துவப் பேரறிஞராகிய பிளாட்டோ என்பவர் பண்டைய ட்ரூயிட் மக்களது அறிவுப் பிழம்பிலிருந்தே தாம் விளக்கம்பெற்றார். பண்டைய கிரேக்கர்கள் பிரிட்டிஷ் ட்ரூயிட் மக்களிடமிருந்தே தங்கள் தத்துவக்கலையைக் கற்றார்கள் என்று பிளாட்டோவின் மாணவரான அரிஸ்ட்டாடில் சொல்லியிருக்கிறார். எனவே, பழைய காலத்தில் பிரிட்டன், கிரீஸ் இந்த இரண்டு நாட்டுக் கொள்கைகளும் சைவ சித்தாந்தமேயாகும் என்பது வெள்ளிடைமலை. பிளாட்டோவின் கொள்கை சைவ சித்தாந்தத்தை மிக ஒத்திருக்கின்றது என்பது குறிக்கற்பாலது. அதேபோல் சிரியா, கால்டியா, எகிப்து முதலிய நாடுகளிலும், அப்பண்டைய உலகக்கொள்கையே நிலவியிருந்ததென்பதற்குப் போதிய சான்றுகள் பகரமுடியும். இவ்வாறாக உலக மொத்தமுமே மற்ற எந்தச் சமயக்கொள்கையும் கனவிலும் கருக்கொள்ளு முன்னமே, சைவ சித்தாந்தம் பரவியிருந்தது என்று சொல்லலாம். இதற்குரிய அத்தனை அத்தாட்சிகளையும் இச்சிறு அறிக்கையிலே எடுத்துக் கூறிவிடல் முடியாது. சர் ஜேம்ஸ் ஜ்யார்ஜ் பிரேஜர் "பழைய வற்பாட்டிலுள்ள மக்கட் கதைகள்" என்ற பெயருடன் மூன்று கனத்த நூற்கள் எழுதியுள்ளார். அவற்றைப் படிப்போர், ஆதிகாலத்திலே உலகின்கண்ணிருந்த மக்கட்பிரிவினரது சமயக்கருத்துக்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சட்டதிட்டங்கள்முதலியவை எவ்வளவு ஒத்திருந்தன என்பதைக் காண ஆச்சரியமடைவர். அவ்வளவு மிகுதியாக ஒத்திருப்பதற்குக் காரணம், அம்மக்கட் பிரிவினர் பலரும் ஒரே இடத்தில் தோன்றிப் பின் பரவினார் என்பதுவது, அல்லது ஒரே இடத்திலிருந்து தங்கள் கருத்துக்களைப் பெற்றார்கள் என்பதுதான் நினைக்கவேண்டியிருக்கின்றது. அந்தப் பொது இடந்தான் தமிழ் நான்மறையா யிருத்தல்வேண்டும்.



தமிழ்ச் சைவ சித்தாந்தமே, பதின்மூன்றாவது நூற்றாண்டின் தொடக்கத்தில் காஸ்மீரத்திலுள்ள பிரதிபிஜ்ஞ வகுப்பினிடமிருந்து பிறந்தது என்று சிலர் கூறுகின்றனர். பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பல காலத்திற்கு முன்பே இந்தியாவில் சைவ சித்தாந்த ஆசிரியர்களும் நூற்களும் நிலவியிருந்தன என்பதை நினைவு செய்து கொண்டால், அவர் கொள்கை மண்மேலிட்ட கலமாகும். மகாபாரத காலத்திற்கு முந்தியது சைவ சமயம் என்பதை எவரும் மறுக்க இயலாது.

சிந்துவிலும், பஞ்சாப்பிலும் முறையேயுள்ள, இறந்தவர் குன்றம் என்று பொருள்படும் "மோஹன்ஜோ டேரோ"விலும், ஹாரப்பாவிலும் தோண்டியெடுக்கப்பெற்ற பல பொருள்களிலிருந்து, கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னேயே, ஆரியர்கள் இந்நாட்டில் குடிபுகுதற்கு முன்பே, இங்கு ஒரு சிறந்த நாகரீகமுள்ள மக்கள் வசித்து வந்தார்கள் என்று வெளிப்படையாகத் தெரிகின்றது. "மோஹன் ஜோடாரோவும், ஹாரப்பாவும்பொதிந்து வைத்துக்கொண்டிருந்த பல உண்மைகளிலே மிகவும் குறிக்கத் தக்கது என்னவென்றால், சைவசமயமானது செம்புக் காலத்தினது, இன்னும் சொல்லப்போனால், உலகில் தோன்றியுள்ள எல்லாச் சமயங்களுக்கும் மிகப் பழைமையானது" என்று இந்திய அரசாங்கக் கல்வெட்டு இலாகாவின் தலைவரான சர் ஜான் மார்ஷல் என்பார் விதந்து ஓதுகின்றார்.

சுவேதாசுவதர உபநிஷத்திலிருந்து சைவசித்தாந்தம் வந்தது என்று சொல்வோரும் சிலர் இருக்கின்றனர். சார்புபற்றிப்பேசுவதுஎன்று சொல்லியும், பிற்காலத்தில் நிறுவப்பெற்ற பல கொள்கைகளைப்பற்றிக் கூறுகிறது என்பதுகொண்டும், இந்தஉபநிஷதம்மிகவும்பிற்காலத்தியது என்று கொள்ளப்படுகின்றது. பழைய உபநிஷத்துக்களில் சொல்லப்பெறாத முற்றும் புதிதான பல பொருள்களை இவ்வுபநிஷதம் கூறுவதோடு, அவைகளில் உள்ள கொள்கைகளையே அடியோடு மாற்றிவிடுகின்றது. 'இந்துக் கொள்கை' என்ற தம் நூலிலே திரு, ஆர். சி. போஸ் என்பார் இவ்வுபநிஷதம் காலத்தால் பிந்தியது என்பதை நிறுவிக் காட்டுகின்றார்.

புராணங்களிலும், தமிழ்ப் பனுவல்களாகிய தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலியவற்றிலும் கூறப்பெறுகிற ஆகமங்கள் வெகு பழைய

காலத்தன என்பதிற் சந்தேகமில்லை. இராமருடைய காலத்திலேயே ஆகமக்கலை மிக விரிவாக விளங்கிவந்தது. ஆகமங்கள் கிறித்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மிக முந்தியனவாக இருத்தல் வேண்டும் என்று தமிழ்ச் சிவஞான போதத்தை முதன் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய ரெவரெண்ட் ஹூவிஸ்டன் என்பார் எண்ணுகிறார். மகாபாரத காலத்து மக்கள் சிவபெருமானை வழிபட்டுவந்தார்கள் என்று கீழ்நாட்டுக் கலைவாணர்கள் ஆராய்ந்து கூறுகிறார்கள். சைவ சித்தாந்தக் கொள்கையானது தமிழர்களது தூய தனிக்கொள்கையென்றும், இதற்கும் வடமொழிக் கொள்கைகட்கும் ஏதும் சம்பந்தம் கிடையாதென்றும், இந்தத் துறையில் பலபட ஆராய்ச்சி செய்தவர்களும் சமநோக்குடைய உத்தமப் பெரியார்களுமான டாக்டர் ரெவரெண்ட் ஜி. யூ. போப், ரெவ்-கௌதி, ஆசிரியர் ப்ரேசா முதலியோர் கருதுகிறார்கள்.

## II. சைவ சித்தாந்தத்தின் மாண்பு.

'இந்தியக்கொள்கைகளைப்பற்றியபுதுவிளக்கம்' என்னும் நூலில் பின்வருமாறு காண்கிறது:— 'அத்வைதம்' என்னும் சொல் உள்பொருள் இரண்டு என்பதைக் குறிக்கிறது. அவற்றில் ஒரு பொருள் உண்மையல்லவென்றாவது இல்லையென்றாவது சொல்லவில்லை. இரண்டு பொருள்களுக்குமுள்ள சம்பந்தத்தை மாத்திரமே அச்சொல் விளக்குகிறது. இரண்டு பொருள்களும் பண்புவகையிலே ஒரு தன்மையனவாக இருக்கின்றன என்பதையும், பொருள் வகையிலே இரண்டாகக் காண்கின்றன என்பதையும் அம்மொழி குறிக்கிறது. இரண்டாகக் காணப்பெற்று முடிவில் ஒன்றாகக் கலக்கின்ற வேற்றுமையில் ஒற்றுமையாகிய இந்தச் சம்பந்தத்தைச் சொல்கொண்டு விளக்கிடுவதென்பது அரிது; உணர்ந்தே கண்டு கொள்ளுதல்வேண்டும். இதுவே அத்வைதக் கொள்கை எனப்படுவது. இதுவே ஒப்பற்ற உயர்ந்த உண்மையுமாகும். இதுவே சித்தாந்தம் அல்லது உண்மை முடிபு எனப் பெறுவது; கிறித்துவர்களாலும் ஒப்புக்கொள்ளப்படுவது.

'சித்தாந்தம்' என்னும் சொல்லுக்கு 'நிறுவப்பெற்ற உண்மை' என்று பொருள். மற்றவை, பூர்வபட்சம் செய்யப்பெற்ற, அல்லது தகர்க்கப் பெற்ற கருத்துக்கள் எனப்படுவன.

சமயம் என்பது, ஆகமங்களில் நேர்முறையாகவும், விரிவாகவும்விளக்கப்பெற்றிருக்கின்றது. வேதங்களில் கூறப்படுவதுபோல ஆகமங்களிலும் இப்பொருள், ஞானகாண்டம், கர்ம காண்டம் என்னும் இரு பகுதியாகச் சொல்லப்பெறுகின்றது. வேதங்களிலுள்ள இவ்விருபகுதிகளிலும் சமயத்தைப்பற்றி ஆழமான கருத்துக்கள் சொல்லப்பெறவில்லை; மேற்போக்கான வகையில் சுருக்கமாகவே கூறப்பெற்றிருக்கின்றன. ஓர் அளவு சமய வளர்ச்சி பெற்றவர்களுக்கு அவை போதும். சமய உணர்ச்சி முதிர்ந்தவர்களுக்குரிய போதனைகள் அவற்றில் இல்லை. யாகங்கள் செய்வதைப் பற்றி வேதங்கள் கூறுகின்றன. உபநிஷத் காலத்திலும் யாகங்கள் நடந்து வந்தன. பிராம்மணங்களில் அவற்றிற்குரிய சடங்குகள் விரிவாக்கப் பெற்றன. ஞானகாண்டப் பகுதிகளும், சமயத்தைப் பற்றிச் சுருக்கமாகவும் பொதுவாகவும் சொல்லுகின்றனவேயல்லாமல், தத்துவங்களைப்பற்றிய விவரங்களையாவது முடிவான பொருளாகிய முத்தியைப் பற்றிய நுணுக்கங்களையாவது கூறவில்லை. ஆனால் ஆகமங்களின் ஞானகாண்டத்தில் முத்தியைப்பற்றி மிக விளக்கமாகவும் திட்டமாகவும் கூறியிருப்பதனால்தான். அதில் கூறியிருக்கும் கொள்கைக்குச் 'சித்தாந்தம்' அல்லது முடிந்த முடிபு என்ற பெயர் வழங்குகிறது.

சனகர், சனந்தர், சனாதனர், சனத்குமாரர் என்னும் நான்கு மூதறிஞர்களும் சிவபெருமானிடம் சென்று வேதங்களைப் படித்து மூளை குழம்பி விட்டதெனவும், தெளிவு ஏற்படவில்லை எனவும் முறையிட, இறைவன் அவர்களுக்கு ஆகமங்களைப் போதித்தார். எனவே, ஆகமங்களின் அருமை பெருமை வெள்ளிடைமலை.

பௌத்த சமண சமயங்கள் எழுந்து மற்ற மதங்களை வீழ்த்திவந்த காலத்திலே சைவ சமயமே, அவற்றின் தாக்கையும் மீறி வெற்றியோடு மேலோங்கி விளங்கியது. அக்காலத்திலேதான் சமயகுரவர்களாகிய திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் இந்நால்வரும் தோன்றினர். சைவ சித்தாந்தக் கொள்கையினைப் பிற்காலத்தில் விளக்கிய பெருமை முற்றும் மெய்கண்ட தேவரதாகும்; அவரைப் பின்பற்றிச் சந்தான குரவர்களாக அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் மூவரும் தோன்றினர். தற்கால சைவசமயம் அவர்கள் காலத்திற்றான் தொடங்கிற்று என்று கூறுதல் வேண்டும். இந்நால்வரும் ஆகமக்கலையைப் பெரிதும் வளர்த்து ஒழுங்குபடுத்தினர்.

காலத்தால் மிகப்பழமையதாயிருந்தும், வடமொழிதென்மொழியிலும் அதனைப்பற்றி விளக்கும் நூல்கள் பல இருந்தும், ஏனோ இச்சைவ சித்தாந்தம், கீழ்நாட்டுக்கலை யாராய்ச்சி செய்யும் அறிஞர்களது உள்ளத்தைக் கவரவில்லை என்பது விந்தையாகத் தோன்றும். காரணத்திற்கு ஏதும் நீள நினைக்கவேண்டுவதில்லை. சர் வில்லியம் ஜோன்ஸ் முதலாக வந்த மேனாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் வட இந்தியாவிலேயே தங்கினார்கள். அங்கு அவர்கள் அறியக் கிடைத்தன சங்கரரது கொள்கையும், சக்தி வழிபாடுமேயாம். சைவ சித்தாந்தம் இன்னதென்று அவர்களுக்கு அறிவிப்பாரில்லை. வடமொழி நூற்களை ஆராய்வதிலேயே அவர்கள் கருத்தைச் செலுத்தினர். ஆயினும் உண்மை யறிந்த ஆசிரியர் மாக்ஸ்மூலர் என்பார் ஆராய்ச்சிக்காரர்களுக்குப் பின்வருமாறு அறிவுறுத்திப் போயிருக்கிறார்.

"வடமொழி நூற்களை ஆராய்வதிலே அவர்கள் காலத்தைச் செலவழித்துவிடலாகாது. தென்னிந்தியாவிலே, ஒரு கொள்கை உண்டு. அதைப்பற்றிப் பல நூற்கள் இருக்கின்றன. வடமொழியின் சம்பந்தம்

அதற்கு இருப்பதாக நன்கு தெரியினும், மிக்க அழகு வாய்ந்தனவும் மிகச் சிறந்தனவுமான பல பழந்தனி யியல்புகளைத் தனக்கே உடையதாக அது காண்கிறது. அவை ஆராய்ச்சிக்குரியன. திராவிட மொழிகளையும் அவற்றிலுள்ள இலக்கியங்களையும் ஆராய்ச்சியாளர்கள் பலர் கற்கும் பேறு பெறவில்லையே என வருந்துகிறேன். வடமொழியிலே மேலும் படித்தற்கு ஒன்றும் இல்லையே என்று குறை கூறும் இளமாணவர்கள் இந்தத் துறையில் இறங்குவார்களாயின் பெரும்பயன் எய்துவார்கள் என நான் நம்புகிறேன்.''

பேரறிஞராகிய திரு, வி. வி. இரமணன் கூறுகிறார்:— ''மாக்ஸ் மூலர் இறப்பதற்கு முன்னே எழுதிய 'இந்தியச் சமயங்கள் ஆறு' என்னும் அரிய நூலில், வடமொழி தென்மொழியில் ஆகமக் கலையைப்பற்றிய நூற்கள் இருக்கின்றன என்பதை அறிந்திருந்தார் என்ற குறிப்புகள் கிடைக்கின்றனவே யல்லாமல், இவ்வாகமங்களிலே விளக்கியுள்ளபடி சைவதரிசனங்களின் உட்பிரிவுகளை அவர் கற்றிருந்தார் என்றாவது, தெரிந்திருந்தாரென்றாவது அறிவதற்கு ஏதும் ஆதாரம் இல்லை'' எனவே, திரு, மாக்ஸ் மூலர் மேலே காட்டிய மேற்கோளில் கூறியபடி சைவ சித்தாந்தத்திற்கு வடமொழியின் சம்பந்தம் இருப்பதாக நன்கு தெரிகிறது என்பதில் ஏதும் பொருளில்லை.

சைவ சித்தாந்தக் கொள்கையைப் பாராட்டும் மேனாட்டுக் கலைவாணர்களிலே, டாக்டர், ஜி யூ. போப், திரு, எச். ஆர். ஹாவிஸ்டன், டாக்டர், கிராண்ட், திரு, ஜி. எம். காப்பன், திரு, டப்ளியூ. எச். வேஷாமொரஸ், டாக்டர் - பார்னட் முதலியோர் சித்தாந்த நூற்களை ஆங்கிலத்திலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்திருக்கின்றனர். டாக்டர், பால்டுயெசன், டாக்டர், உவில்லியம் ஜான், டாக்டர், எப், ஆட்டோ ஸ்ரேடர், திரு, எச். ஏ. பாப்லி, ஆசிரியர், ஆர். டப்ளியூ. ப்ரேசர், திரு, எப். கௌதி, திரு, டி. ப்ரௌக்ஸ், திரு, ஜி. இ. பிலிப்ஸ், திரு, ஏ. எல். கினேடன் முதலிய பலர் சித்தாந்தக் கொள்கையில் வல்லவர்களானவர்கள்.

தமிழ் ஆசிரியர்களிலே சென்ற நூற்றாண்டிலே சைவ சித்தாந்தத்திற்கு மறு உயிர் கொடுத்தவர், திரு, ஆறுமுக நாவலர் ஆவார். யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குவந்து அச்சுக்கூடம் வைத்துச்சைவ நூற்கள் வெளியிட்டும், சொற்பொழிவுகள் ஆற்றியும் சைவ சித்தாந்தத்தை வளர்த்தார்; தமிழுக்கும் புத்துயிர் தந்தார். இப்பெரியார் 1883-ம் ஆண்டில் மறைந்தார்.

சித்தாந்தத்தை வளர்த்தவர்களிலே அடுத்த பேரறிஞர் திரு, நல்லசாமிப் பிள்ளை ஆவார். சிவஞானமுனிவர் வரைந்த திராவிட மாபாடியத்தைத் திருவாவடுதுறை மடம் மறைத்து வைத்துக்கொண்டிருந்த அக்காலத்திலே சிவஞான போதத்தை ஆங்கிலத்திலே எழுதி அதற்கு விரிவுரையும் வரைந்தவர் இவர். 'சித்தாந்த தீபிகை' என்னும் வெளியீட்டைத் துவங்கி அதற்கு ஆசிரியராக இருந்தார். ஐரோப்பா அமெரிக்கா முதலிய



அயல் நாடுகளில் சைவ சித்தாந்த ஞானம் பரவுதற்கு இத்தீபிகை துணையாக இருந்தது.

அடுத்தபடி சித்தாந்தத்திற்குத்தொண்டாற்றிய பேரறிஞரும், எனது கெழுதகை நண்பருமான திரு, டி. கோபால் செட்டியார் ஆவர். சைவ சித்தாந்தத்தைப்பற்றி அவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூற்கள் ஐரோப்பா அமெரிக்காவிலுள்ள அறிஞர்களது உள்ளத்தைக் கவர்ந்தன. அறிவியல் முறையிலே சுவிடன் தேசத்துப் பெரியாரது மூதுரைகளைக் காட்டிச் சித்தாந்த உண்மைகளை விளக்கியதற்காக, சைவர், திரு, செட்டியார்க்குக் கடமைப்பட்டவர் ஆவர். அவரது நூற்களின் பயனாகப் புது ஜெருசலேம் சர்ச்சைச்சேர்ந்த கிறித்தவர்கள், தங்கள் மதத்தோடு சைவசித்தாந்தம் ஒத்திருப்பதை யறிந்து அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஈண்டுக் குறிக்கத்தக்கது.

நமது உள்ளமார்ந்த நன்றிக்குரிய மற்றொரு பெரியமூதறிஞர் சுவாமி வேதாசலம் அவர்கள் ஆவர். இவர் பல நூற்கள் எழுதியும், பல சொன்மாரிகள் பொழிந்தும் சைவத்தை விளக்கியும் உணர்த்தியும் வருகிறார். சித்தாந்தம் நம் நாட்டிலே பலபேரால் படிக்கப்படுவதற்குக் காரணம் இவரது அரும்பணியேயாகும். அப்பணியின் பயனாகச் சென்ற 32 ஆண்டுகளாக, சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜம் சைவத்தை வளர்ப்பதற்குச் செய்து வரும் அருந்தொண்டினைப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். பாளையங்கோட்டை சைவ சித்தாந்த சபை சில காலம் தொண்டாற்றியது அது செய்த நன்மைகட்கு நமது நன்றி அதற்கு உரியது. திரு, காந்திமதிநாத பிள்ளையைப்போல சைவ சித்தாந்தத்தை விளக்கிய அறிஞர்கள் பலருக்கும் நமது செய்நன்றி செலுத்தற்பாலது.

சைவசித்தாந்தத்தைப்போல் சமரசமானதாயும் மற்ற எல்லாச் சமயங்களுக்கும் இடங்கொடுப்பதாயும் இருக்கும் கொள்கை உலகத்தில் வேறு ஏதும் இல்லை, என்னலாம். அதனுடைய நோக்கமே,

''யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்'' என்பதாகும்.

சமயங்கள், படிப்படியாக உயிரினது உண்மை யுணர்தற்குத் துணையாக நிற்பன.

ஒரு சார்பாகப் பேசவேண்டும் என்னும் அவசியமேயில்லாத மேல்நாட்டுக் கலையறிஞர்கள் சைவ சித்தாந்தத்தைப்பற்றி என்ன கூறுகிறார்கள் என்று காண்போம்.

திரு, ஜி, யூ. போப் எம். ஏ; டி. டி. கூறுகிறார்: ''திராவிடரது அறிவிற் கனிந்தெடுத்த அமுதமே சைவசித்தாந்தக் கொள்கையாகும்.

"இந்தியாவிலுள்ள எல்லாச்சமயங்களிலும்மிக்கவிரிவானதும், மக்களது உள்ளத்தைக் கவரக்கூடியதும், உண்மையாய்க் காணின் ஐயமில்லாமலே பெரும்பயனளிக்கவல்லதும் சைவசித்தாந்தமே யாகும்"

கிறிஸ்தவக்கல்லூரி வெளியீட்டிலே (XXII-9) திரு, டப்ளியூ கௌதி எழுதுகிறார்:—

"சைவ சித்தாந்தத்தைப்போல், நாம் ஏற்றுக்கொள்ளுதற்கு உரிமையுடைய கொள்கையாவது சமயமாவது வழிபாடாவது வேறு எதும் கிடையாது.

"மிகப் பழைமையானது என்ற பெருமை அதற்கு உண்டு. சமய உலகத்திலே, தென்னிந்தியாவின் தொன்மைப் பெருமைகள் யாவற்றையும் தான் ஏற்று விளங்குவது சைவக்கொள்கையேயாகும். அதுவே தமிழர்களது சமயமாகும். மற்ற எல்லாச் சமயங்களும், அதனோடு ஒத்துப் பார்க்கும்போது, அயல் நாட்டினதென்றே கூறவேண்டிவரும்.

"தமிழர்களால் பெருவாரியாகக் கைக்கொள்ளப்பெற்றிருப்பதனாலும், மிகப்பழைய காலத்துப் பொருள்கள் சிலவற்றைத் தன்னகத்தே கொண்டிருப்பதனாலும், சைவசித்தாந்தம் மற்ற எல்லாக்கொள்கைகளைக் காட்டிலும் தமிழர்களுக்கு உரிமையானதாகும். தமிழ்க் கிறித்தவப் பாதிரிமார்களாலே படித்தற் குரியதும் அஃதேயாகும்.

"சமய உணர்ச்சி தருவதிலும், வாழ்க்கைக்கு விளக்கமாக இருப்பதிலும் சைவ சித்தாந்தத்தைக் காட்டிலும் மேன்மையான கொள்கை தென்னாட்டிலே கிடையாது. இந்தியா முழுதிலுமே இதற்கு இணையானது இல்லை என்று சொல்வதும் தவறாகாது. இந்தியரது மனோநிலையும் அவரது வாழ்க்கை நிலையும் மிக உச்ச அளவில் சென்றுகொண்டிருந்தது என்பதை அதனிடத்தேயுள்ள பெருமைகளை நோக்கும்போது துணிந்து கூறலாம். கிறித்துவப்பிரசாரகர்கள்செய்யும் வேலையைமாத்திரம் இதனோடு கலந்து பார்த்தலாகாது."

'இந்தியாவின் உள்ளம்' என்று டாக்டர் எல். டி. பார்னட் எழுதியுள்ள நூலில் கூறுகிறார்:

("சைவ சமயத்தில் இருக்கின்ற) கசிந்துஉருகிப்பாடும்செழும் பாடல்களைப்போல் உலகத்திலுள்ள வேறு எந்த சமயத்திலும் கிடையாது. உணர்ச்சியின் உயர்வு, ஆர்வத்தின் திண்மை, உருகிச் சொல்லும் சொற்களின் அருமை முதலியவற்றிலும் வேறு எந்த மதமும் இணையாகாது."

'இந்திய தெய்வக் கொள்கை' என்னும் தமது நூலிலே திரு. என். மெக்னிகால் எம். ஏ., டி. லிட் என்பார் வரைகிறார்:—



"கடவுள் கொள்கையிலே பார்க்கும்போது, இந்திய மண்ணிலே தோன்றிய எல்லாவற்றைக்காட்டிலும் மிகச் சிறந்த கொள்கை இது".

"கடவுள் கொள்கையைப்பற்றி(சைவசித்தாந்தத்தில்கூறியிருப்பதைக் காட்டிலும்) நிரம்பிய எண்ணங்களையும் உன்னதக் கருத்துக்களையும் இந்தியாவில் வேறு எந்தச் சமயமும் கூறவில்லை. புவனத்தை ஆண்டு அடிமை கொள்வதே எல்லாம் வல்ல இறைவனின் என்றும் மாறாத செயலாக இருக்கின்றது என்று கொள்ளும் சைவ சமயக்கொள்கை மிகச் சிறந்தது."

"ஆதிமுதல் அந்தம்வரை அருளே வடிவமான ஆண்டவன் நீதி வழுவாத கடவுள் என்ற அடிப்படையான கொள்கையை (சைவ சித்தாந்தம்) கண்டு பற்றிக் கொண்டிருப்பது போல இந்தியாவிலுள்ள வேறு எந்தக் கொள்கையும் கொள்ளவில்லை."

ஏசு கிறிஸ்துப் பெருமானாலே செய்யப்பெற்ற இரண்டாவது கிறித்தவ சமயவிளக்கம் அறிவியலுக்குப் பொருத்தமுடையதாய்ச் சைவ சித்தாந்தத்திற்கு ஒத்து இருக்கின்றது. எனவே, சைவ சித்தாந்தமே எதிர்கால உலகம் போற்றிப் பற்றிக் கொள்ளுதற்குரிய உலக சமயமாகும் என்பதில் ஐயமில்லை.

## III. சைவ சித்தாந்தத்தின் வளர்ச்சி.

சமய நூற்களிலே சமய உண்மைகள் பல கூறப்பெற்றிருக்கின்றன. மாறிக்கொண்டே செல்லும் கால நிலைக்கு ஏற்ப அவ்வுண்மைகள் வளர்ந்து கொண்டே செல்லவேண்டும். அறிவியல் ஆராய்ச்சி இல்லாத காலத்திலே தவத்தால் சிறந்த பெரியோர்களால் எழுதப்பட்ட கொள்கைகள் இக்காலத்துக்கு ஏற்றவகையிலே விளக்கம் செய்யப்பெறல்வேண்டும். இன்றைய மக்களது உள்ளங்களில்சென்று பாய்தற்குஉரிய முறையிலே கொள்கையை விளக்குகின்ற சமயங்கள் நம் நாட்டில் இப்போது இல்லையென்றே சொல்லுதல்வேண்டும். எதற்கெடுத்தாலும் 'ஏன் அப்படி?' என்று கேள்வி கேட்கும் இக்காலத்துக்கு ஏற்றமுறையில் சமய உண்மைகளைவிளக்க வேண்டுவது அறிஞர் கடமை.

இறைவனது திருவிளையாடல்களின் உட்கருத்தைப் பற்றி எவரும் இதுவரை விளக்கவராமல் இருப்பது ஒரு பெரிய குறையாகும். பெரும் புகழ்படைத்த எத்தனையோ புலவர்கள் உள்ள இந்நாட்டிலே இதை விளக்குவதா கடினம்? பல நூற்றாண்டுகளாயும், திருமூலரது திருமந்திரத்திற்கு உரைகாணும் அறிஞர் ஒருவர் தோன்றாதிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

## IV. முடிபுரை.

இப்படியே சென்றால் நமது சமயம் தற்கால முறையில் வளரும்மற்ற சமயங்களாகிய கடல் வெள்ளத்தில் மூழ்கிப் போகவேண்டிய தாய்விடும். எனவே, நான் தமிழ்க் கலைவாணர்களையும் சமயப் பெரியார்களையும் கேட்டுக்கொள்வது என்னவென்றால், 'உறக்கத்தை விட்டு விழியுங்கள்! எழுங்கள்! அறிவியல் முறையிலே, தற்காலத்திற்குத்தகுந்தவகையிலே சமயத்தை வளருங்கள்!' என்பதேயாகும்.

சைவ சித்தாந்தக் கலையெல்லாம் பனை ஓலைகளில் இருந்த காலம் எப்போதோ போய்விட்டது. சைவமடாதிபதிகள் இனி அவற்றை மூடி மூடி வைக்க முடியாது. எத்தனையோ சித்தாந்த நூற்களும் உரைகளும் வெளியாய் விட்டிருக்கின்றன. சைவ சித்தாந்தத்தில் உண்மையன்புடைய ஒவ்வொருவரும் இனிச் சும்மா இருத்தல் ஆகாது. அறிவுடையவர்கள் பலரும் ஆராய்ச்சி செய்தல்வேண்டும். நூதன நூல் பல இயற்றிச் சமயம் பரப்பல்வேண்டும்.

பணம் படைத்தவர்கள் பலரும் நமது சமய உணர்ச்சிக்குத் தங்கள் பணம் செலவாவதில் வேட்கையுடையவர்களாக இருத்தல்வேண்டும். மற்ற சமயக்காரர்கள் செய்யும் சூழ்ச்சியில் சிக்கித் தங்கள்மதம் சாகவும், அவர்கள் மதங்கள் வளரவும் பெருந்தொகைகள் வழங்கும் வழக்கம் செல்வவர்தர்களை விட்டு ஒழியவேண்டும்.

நமது மடாதிபதிகளும் விழித்து எழுந்து நிலையறிந்து சமயத்தைக் காக்க முன்வருவார்களாக; சைவ சித்தாந்தத்தை வளர்த்தற்குரிய வழிகளைக் கோலுவார்களாக.

பெருமான்களே! பெருமாட்டிகளே!

இதுகாறும் என்மனதில் தோன்றியவற்றை எல்லாம் கூறிச்சென்றேன். பொறுமையாக அமர்ந்து கேட்டதற்காக உங்கட்கு எனது நன்றி உரியதாகும்.

சைவ சித்தாந்த சமாஜத்தின் 32-ம் ஆண்டுவிழா இனிது துவங்குமாறு எல்லாம் வல்ல ஆண்டவனை இறைஞ்சுவோமாக. அவனருளாலே அவன் தாள் வணங்குதற்குரிய தொண்டைப் புரியும் இம்மகாநாடு இவ்வாண்டு இனிது நடப்பதோடு, இனியும் இச்சமாஜம பல மகாநாடுகள் கொண்டாடி, நீடூழி நிலவி மிளிர்தல்வேண்டும் என எனதுள்ளமார வாழ்த்துவதோடு இதனைத் திறந்து வைக்கும் பணியை யாற்றியவனாய் அமர்கின்றேன்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி!

---

௮

# மதக்கல்வி.

(போத்தனூர்-வேலூர், திரு. R. வேங்கடநாராயண சர்மா அவர்கள்.)

பூமண்டல சிரம்போன்ற நம் பரத கண்டத்தில், கலிபுருஷ மகிமைபால் மறைந்து கிடக்கின்ற சாஸ்திரங்கள் பல; வெளிவந்துலவுகின்ற சாஸ்திரங்கள் சில. இச்சிலவற்றையும் அறியாதவர் பலர்; அற்பமேனும் அறிந்தவர் சிலர்; முறைபாயறிந்தவர் அச்சிலரிலும் சிலரே. எவ்வகையாலும் அனுபவமுள்ளவர் எங்கோ ஒருவர். அப்படி அபூர்வமாகவும், ஜனங்களுடைய மனோபாவ ருசிகளுக்கு விக்கியாசமாகவும், ஆனால் பரமஸேஷமாகவுமுள்ள வார்த்தைகளைச் சொன்னாலோ, அல்லது எழுதினாலோ அவைகளை ஜனங்கள் எவ்விதம் ஏற்றுக்கொள்ளக்கூடும்? ஆகையால், மேனாட்டு நாகரீக ஆசையுற்ற சிலர், தற்கால நிலைமையில் பொதுஜனங்களின், அதாவது பெரும்பாலோரின் தேக மேனுபக்குவங்கள் எம்மட்டிலுள்ளதோ, அந்தமட்டிலிருந்தே நாம்வேலை செய்வதுதான் முறையென்று தற்கால நூல்கள் எழுதியும் பிரசங்கங்கள் செய்தும் வருகிறார்கள். அம்மேதாவிகளின் கூற்றில் உண்மையேயில்லையென்று நான் கூறுவதில்லை. ஆனால் அவர்கள் கூற்று, பதக்கறிவின் பலம் போதாத, லக்ஷியமே அறியாத,கொள்கையில்லாத சாமான்யஜனங்களை எந்நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறதென்பதை அவர்களே நன்றாக யோசித்துப் பார்க்கட்டும்.

2. வெளிவந்துலாவும் சாஸ்திரங்களில் சோதிடம் ஒன்று. இதனால் மூன்று காலங்களையுமறியலாம். இப்போது பிரத்யக்ஷத்தில் கிரகணம், பௌர்ணமி, அமாவாசை முதலான சம்பவங்கள் நேர்வனவற்றைப் பார்க்கிறோம். நன்றாக யோசித்துப் பார்த்தால் நமது சாஸ்திரங்களின் உயர்வுக்கு இக்கலையொன்றே போதுமானது. இன்னும் கீதம், பரதம், சிற்பம், வைத்தியம், யோகம் ஞானம் முதலிய பல ஆச்சர்யகரமானகலைகள், நம்நாட்டில் நடப்பிலிருக்கின்றன. இக்கலைகளனைத்தும் ஒருங்கே நமது பழமையான மத நூல்களுக்குப் புறம்பாகவும் மாறாகவுமில்லை. எல்லா நூல்களும் நமது மதக்கொள்கையிலேயே பிறந்து, வளர்ந்து, திரிந்து, நிலைத்து அதையே புகழ்கின்றன. அயல் நாட்டாரும் போற்றிப் புனைகின்ற பெருமையுற்ற நமது தத்துவங்கள், இன்னதென்றறியாத நமதினைஞர்களை நாம் அபிவிருத்திக்குக் கொண்டுவருவதெப்படி?

3. மதம் என்பது மக்கள் வாழ்க்கையாத்திரை செல்லும் பாதையாகும். இப்பாதையில் செல்லுகின்ற மக்களின் மந்ததீவிரகதிகளுக்குத் தக்கபடி தக்க காலங்களில் அறம் பொருளின்ப வீடா

கிய பலன்கள் அடையப்படுகின்றன. இப்பாதைக்குப் புறம்பாகவுள்ள இடங்களில் அடையப்படுவதாகக் கருதப்படும் பயன்களில் விபரீதங்களும் தாபங்களுமே நிறைந்திருக்கின்றன. சூரன், இராவணன், துர்யோதனன் முதலானவர்களின் பலங்கள் இவற்றையே விளக்குவன. கண்ணில் காண்கின்ற அரசாங்க சட்ட திட்டங்களில், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இராஜாங்கத்திற்கும் எவ்வளவு சம்பந்தமுண்டோ அதைவிடப் பன்மடங்கு அதிகமும் சிறப்புமுள்ள தெய்வீக இராஜாங்கத்திற்கும் நமக்கும் சம்பந்தமுண்டு என்பதை, மனிதன் சிறிதளவாவது உணர்ந்தாலன்றி உண்மையில் இன்புறமுடியாது.

4. அழியாத பேரின்ப நிலையம் நமது மதநூல்களாகும். இந்நூற் பார்வையிலிருந்து பார்ப்பவர்களுக்குத்தான், வரப்போகும் சம்பவங்களின் நிலைமைகள் நன்றாகத் தெரியவரும். தெய்வீகம் எப்பொழுதும் நேர்மையான முறையிலேயே செல்லுகின்றது. அம்முறையை எதிர்ப்பவர்கள் இடர்ப்படுகிறார்கள். ஜீவ அபிமான அகங்காரமுள்ளவர்களால் தெய்வீக தந்திரம் அறியமுடியாதது. அகங்காரமிழந்த மெய்யடியாரான மணிவாசகனாரும், தெய்வீக சக்தியின் கருணையைத் தமது "அற்புதப் பத்தில்" வெகு அழகாக விரித்துரைக்கின்றார்.

"ஊசலாட்டுமிவ் வுட லுயிராயின விருவினை யறுத்தென்னை
ஓசையா லுணர் வார்க்குணர்வரிய வனு ணர்வுதந் தொளியாக்கிப்
பாசமானவை பற்றறுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையா
லாசைதீர்த் தடியாரடிக்கூட்டிய வற்புத மறியேனே."

(திருவாசகம்)

5. அந்நிய நாட்டாருடைய நாகரீகங்களை மேற்கொள்ள முயற்சிக்கின்ற நாம், அவர்கள் பாடசாலைகளில் சத்திய வேதம் என்ற பைபிளைப்(மதநூல்) போதிப்பதைப் பார்த்திருந்தும் நாம் நமது மதக்கல்வியை பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கவேண்டுமென்ற எண்ணம் கொள்ளாத நமது தலைவர்களுக்கு இனியாகிலும் தேசப் பற்றுதல் உண்டாகிக்காரியசித்தி யுண்டாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். நம் மதப்பற்றுதலுள்ள பெரியோர்கள் இப்பொழுதும் ஆங்காங்கு மதபோதனைகளைச்செய்துவருகிறார்கள். ஆனால் அவர்களின் போதனைகளைக் கேட்பவர்களோ சொற்பம். கேட்டபடி நடப்பதற்குத் தங்கள் போலிச்சுகங்களைத் தள்ளி நிற்க ஆற்றலற்றவர்களே அதிகம். "பழக்கம் கொடியதுபார் பாறையிலுங் கோழி கிழிக்கும்" என்னும் இவ்வித நிலைமையில் நமது சிறுவர்களைத்தான் மதநெறிகொண்டொழுகப் பயிற்றுவித்தல் வேண்டும். பலவகையான அதிகாரிகளுக்கும் நமது மதம் இடங்



கொடுக்கின்றது. குப்பைகூட்டி முதல் பிரதம மந்திரிவரை அரசு ஆக்ஞையே இராஜாங்க க்ஷேமமெனக் கொள்ளல்போல், அந்தந்த அதிகாரிகளான ஜீவர்களுக்கு ஏற்பட்ட அந்தந்த இருவினை அதிகாரங்களை கடவுள் கட்டளையென உணர்ந்து சரிவர நடந்துவருவதால் அவரவர்கட்கு, உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்திருக்கின்ற பரம்பொருளின்-சிவபூரணசுடரின் ஒப்புயர்வற்ற பிரபஞ்ச விலாஸமாகிய லீலைக்காட்சியைக்காண உணர்த்தி வைக்கின்றது நமது மதமாகும்.

6. அத்யயனபாடசாலை, சாஸ்திரபாடசாலை, தேவாரபாடசாலை ஆகியவைகள், தற்காலம் ஒளியிழந்தசந்திரன்போல ஆங்காங்குவயிற்றுப் பிழைப்பையே முக்கியார்த்தமாகக்கொண்டு நடைபெறுவதாகக் காணப்படுகின்றன. மதமார்க்கத்தின் கனிகளான அன்பு, ஆக்கம், இன்பம், ஈகை, உண்மை, ஊக்கம், தனிமை, பொறுமை, பணிவு ஆகிய குணங்களின் வாசனைகூடக் காண்பது அரிதாயிருக்கின்றது. இனியாகிலும் போலிகள் தேவிசெய்யாவண்ணம் சத்தியபலனை சாந்தியைப் பரவச்செய்ய "சூழ்க அரன் நாமமே" என்பதுபோல இப்பாடசாலைகள் நிலவும்படி நமது மத அபிமானிகள் அக்கரைகொள்வார்களானால் இதைவிடப்பெறுவதுவேறென்ன இருக்கின்றது! நித்யானந்தமயமான இச்சக்தியல்லவோ சநாதனமான நமது இந்துமதக்கனியாகும். இதனன்றோ அக்காலும், இக்காலும், எக்காலும் பூமண்டலத்தின் பல பாகங்களாலும் போற்றப்படுகின்றது. சிரசை மற்ற அவயவங்கள் போற்றித்தானாக வேண்டும்.

7. சர்வ வித்யா சேவிதமான நமது மதம், தற்காலம் பொது ஜனங்களால் கௌரவமில்லாதவகையில் பார்க்கப்படுகின்றது. எவர் எப்படிப் பார்த்தபோதிலும் வேதாந்தமயமான அதன் காந்தியானது குறைந்துவிடாது. ஆசைகளைத்தும் நிறைவேற்றித்தரவல்ல அதன் உண்மை மகிமையை இப்பொழுதும் அறிந்தவர்கள் இல்லாமற்போகவில்லை. மதத்திரய மடங்களும், அவற்றை அனுசரித்த உபமடங்களும், மற்றும் கர்ம பக்தி யோக ஞான மடங்களும் சங்கங்களும் பல இடங்களில் நேர்மையுடனும், சிறிது நேர்மை குன்றியும் நடந்து வருகின்றன. சர்வ ஜீவ சுகஸ்தாபனமே அரசாங்க நோக்கமாகும். இச்சீரிய நோக்கமே முக்கியமாகக்கொண்டது நமது மதம். அதனன்றோ "ஸர்வேஜநா ஸுகிநோ பவந்து" என்றும், "வேந்தனும் ஓங்குக" என்றும் இன்றும் நாம் கூறிவருகிறோம். மதத்திற்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லையென்று கூறும் கூற்றுக்கள் மெய்ப்பொருள்காணும் அறிவுடையோர்களால் வெறுக்கத்தக்கன. ஆகையால் உயிர்த் தேகம் போன்ற நமது

மதக் கல்வியை உணர நமது சிறுவர்களுக்குத் திட்டம் செய்து நமது தேசக்ஷேமம் நமது மதத்திலேதான் இருக்கிறதென்பதை அறிவாளிகள் இனியாகிலும் உணர்வார்களாக. தேசக்ஷேமம் எப்படி நமது ஆகார விவகாரங்களில் இருக்கிறதோ அவ்விதமே நமது தேச க்ஷேமமும், நமது கர்ம, பக்தி, ஞானங்களால் உண்டாகிறது. இவற்றைப் போதிப்பதே நமது மதமாகும்.

8. உண்மையான இந்து மதத்தில் ஜாதி, கர்மங்கள் முதலிய பல பேதங்கள் இருப்பதற்கில்லையேயென நவீன நாகரீக மேதாவிகளிற் பலர் கூறுகின்றனர். அவர்கள் விசாலமான தங்கள் அகக் கண்ணால் அதாவது ஞான நேத்திரத்தினால் ஆர அமர ஆழ்ந்து காண்பார்களானால் கடவுளின் விசித்திரமான வைபவங்கள் பல நிற வர்ணங்களால் எழுதப்பட்டுச் சோபிக்கும் ஒரு சிறந்த சித்திரம் போல் பலவகைப்பட்ட பேதங்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து சோபிக்கிறது நமது மதமென்றும், பலவகைப்பட்ட பேதங்கள் இருக்கத்தான் வேண்டுமென்றும், அப்பேதங்களாலேயேதான் நாம் உண்மையான லக்ஷியத்தை அடைய முடியுமென்றுங் காண்பார்கள்.

9. வாழ்க்கையில் உயிர் நிலையாய் இருப்பது மதம். நடப்பு ஜன்மத்தின் லக்ஷியத்தை மாத்திரம் கொண்டதல்ல நமது மதம். பல ஜன்மங்களையும் கருத்தாகக் கொண்டது. பிரமாண்டமான இவ்வுலகம் முழுவதையும் இன்னும் மற்ற அண்டங்களையும் குறிக்கொண்டுள்ள நமது மதத்தின் கம்பீரத்தன்மையை அற்ப நோக்கமுள்ளவர்களால் எப்படி முழுமையும் காணக்கூடும்? நாளிது வரையில் நம்மனோர்களால் பூஜிக்கப்பட்டு வருகின்ற மஹா புருஷர்களெல்லாம் நமது மதத்திலே தோன்றிப்புகழுற்றார்கள். எந்நாளும் அன்னோர் புகழ் நிலைத்து நிற்கும்.

10. இப்பொழுது கிராம சீர்திருத்தங்களுக்காக அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டிருக்கிற தொகையை மதக்கல்விக்காகப்பயன்படுத்த மேதாவிகளான காரியஸ்தர்களின் மனதில் படும்படி கலிபுருஷன் செய்வானா என்பதே நமது கேள்வியாகும். வருங்காலம் கூறும் சோதிடர்கள் இவ்விஷயத்தில் நக்ஷத்திரங்கள் புத்தியைச் செலுத்தி உலகுக்குரைப்பார்களாக. பவிஷ்யத்புராணத்தில் இனி வரப்போகும் சம்பவத்தைப் பற்றிய விபரம் ஆராய்ந்து சொல்வார்களாக. நான் முகனும் ஓரோர் காலங்களில் அறியாமையில் மயங்கினார் என்றால் அது உலக நன்மையேயாகும். ஆகமத்தின் கட்டளைகளும் அறிவின் பெருமையும் உறுதியின் சக்தியும் எண்ணிப் பார்க்கவாவது எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

உ

# தமிழும் ஹிந்தியும்.

(அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் போராசிரியர்,
திரு, எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள்)

புதிய அரசியலாட்சி விழா தமிழ் நாட்டில் ஹிந்தி வழிபாட்டின் கொடியேற்றத்துடன் துவங்குமென்று கனம் முதன் மந்திரியவர்களின் ஆணைப்பறை முழங்குகின்றது. சென்னை இராமகிருஷ்ண மடத்தில் முதன் முதல் கனம் மந்திரியவர்கள் வெளிப்படுத்தியபோது அவர்கள் கூறியதன் சுருக்கம் இதுவாகும்:—

"இந்தியருக்கு ஒரு பொதுமொழிப் பயிற்சி இன்றியமையாதது. அதனால் ஹிந்தியைப் பள்ளிச்சாலைகளில் இளம்பருவத்தில் பிள்ளைகளைப் பயிலப் பண்ணுதல் வேண்டும். இப்போது அதற்குரிய அதிகாரம் நம் கையிலிருக்கிறது. ஆகையால் விரைவில் அதைச் செய்வோம்"

"காங்கரஸ் ஆதிக்கம் மக்களின் உரிமைகளை யோம்பி வளர்க்கும். மக்களை வற்புறுத்துங்கட்டுப்பாடுகளை நெகிழ்க்கும்" என்று காங்கரஸ் தலைவர்கள் சொன்னார்கள்; இன்னுஞ் சொல்லி வருகிறார்கள். தமிழ் நாட்டுப் பள்ளிகளில் அந்நாட்டவரின் தாய் மொழியாகிய தமிழ் இன்னும் கட்டாயப்பாடம் ஆக்கப்படவில்லை. இந்நிலையில் தமிழ்ப் பிள்ளைகளெல்லாரும் இளம் பருவத்தில் தங்களுக்கு அந்நிய மொழியாகிய ஹிந்தியைக் கட்டாயப்பாடமாகப் பயின்றே தீரவேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் காங்கரஸ் மந்திரிகள் ஏற்படுத்துவது உரிமை நலம் ஓம்புவதாகுமா? தமிழரின் தாய்மொழி வளர்ப்பதற்கு இக்கட்டுப்பாடு இன்றியமையாததா? ஒருகால் அரசியற்றுறையில் ஹிந்தியை இந்தியருக்குப்பொதுமொழியாகக் கொள்ளுதல் விரும்பத் தக்கதாமெனினும், அதை விருப்பப் பாடமாகப் பயிலவிட்டு அதைக் கற்கும் விருப்பத்தை வளர்க்க முயல்வது பொருத்தமாகலாம். அதைவிட்டுச் சிறு பருவத்தே பள்ளிபுகும் பிள்ளைகளெல்லாம் தமிழைக் கற்பினும் கற்காவிடினும் கட்டாயமாய் ஹிந்தி படித்துத் தீர வேண்டும் என்று விதிப்பது முறையன்று.

ஹிந்தி தமிழரெல்லோருக்கும் அவசியமன்று. தங்கள் நாட்டுக்கு வெளியே தமிழறியாதாரிடம் பழக விரும்புவோருக்கு விரும்புங்கால இடவாய்ப்புகளுக்கேற்பத் தங்கள் அவசியத்தளவு அப்பொதுமொழிப் பயிற்சி மேற்கொள்ளுத லியல்பாகும். அதற்குமேல் ஹிந்தியின் உதவி வேண்டாதவரும், வெளிநாட்டுப் பழக்கத்திற்கு என்றும் அவசியம் நேராதவருமான எல்லோரும், ஹிந்தி பயின்று தீரவேண்டுமென்பது யார் நன்மை கருதிய

தாருமென்று இதுவரை எந்த மந்திரியும் எங்கும் தெளியவுரைத்தாரில்லை. ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கிக் கற்பிப்பதனால் என்ன கெடுதியென்று மற்றவர்களைச் சொல்லும்படி மந்திரி வகுப்பினர் வற்புறுத்துகிறார்கள். முதலில் கெடுதி பிறிதில்லையெனினும் ஹிந்திப் பயிற்சியை எல்லோருக்கும் கட்டாயபாடமாக்கக் காரணங் காட்டுவது அதைச்செய்ய விரும்பும் மந்திரிகளின் கடமையாகும். ஹிந்திப் பயிற்சி எல்லோருக்கும் இன்றியமையாததென்று காட்டும்வரை அதைக் கட்டாய பாடமாக்குவது வரம்பிகந்த தவறாகும்.

தமிழ் மொழிக்கும், தமிழர் கலையுணர்வு நாகரிக உணர்ச்சிகளுக்கும், இளம் பருவத்தில் அந்நிய மொழியொன்றைப் பயிலும் பொறுப்பைச் சுமத்துவதே முதற் கெடுதியாகும். 'தாய்மொழியில் எல்லாப் பாடங்களுங் கற்பிக்கப்படவேண்டும். எவ்வித உயர்ந்த கலைப்பட்டத்திற்கும் தமிழ் மொழியொன்றே போதுமானதாக ஆக்கப்படவேண்டும்' என்று அறிவுடையோரெல்லாரும் சொன்னார்கள்; சொல்லி வருகிறார்கள். நாட்டு நலத்திற்கும் நாட்டவர் வளத்திற்கும் யாண்டும் எக்காலத்தும் தாய்மொழிப் பயிற்சியே தக்கதென்பது மறுக்கொணா வுண்மை. நூல்வளமற்ற புதிய மொழிகளைக்கூட வளப்படுத்தி வளர்ப்பதே அறமென்று நாகரிக மக்களெல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். தமிழோ மிகப் பழமையானதும் எண்ணிறந்த சிறந்த நூல்களின் வளத்தால் செழுமையுடையதுமான செம்மொழி என்பதை முதன் மந்திரியவர்களே ஒப்புக்கொண்டு பேசி வருகிறார்கள். எந்தத் துறையிலும் முன்னேற்றத்திற்குத் தமிழ் போதாதென்பது தன் கருத்தென்று அவர்கள் கூறவுமில்லை. ஹிந்தி எவ்வகையிலும் தமிழை ஒப்பதும் மிக்கதும் அன்றென்றும் அங்கீகரிக்கிறார்கள். தமிழறியாத பிற நாடுகளில் பழகுவதற்குப் பொதுமொழியாக ஹிந்தி உதவக்கூடுமென்ற ஒரு காரணந்தான் ஹிந்தியின் சார்பாக இதுவரை கூறப்படுகிறது. இதற்காக ஹிந்தியை எல்லாருக்கும் கட்டாய பாடமாக்க எவ்வித நியாயமும் அவசியமும் ஏற்படமாட்டா. அதற்குமாறாகத் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழர் கலையுணர்ச்சிக்கும் ஹிந்தியைக் கட்டாயபாடமாக்குவது சிறிது இடையூறு செய்யவுங் கூடும். ஒன்று முதல் மூன்று பாரம்வரை ஹிந்தியை வற்புறுத்திக் கற்பிக்கப் போவதாய்த் தாம் துணிந்துவிட்டதாகக் கனம் முதன் மந்திரியவர்கள் மாம்பலத்தில் கல்வித்துறை முற்றிய புலவர் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். இது சில தினங்களுக்குமுன் அவர்களே தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் கூறியதற்குச் சிறிது மாறுபடுகின்றது. அக்கல்லூரி யுபந்யாசத்தில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குந் தம் கருத்தை விரைந்து தாம் நிறை



வேற்றப்போவதில்லை யென்றும், கல்வித்துறை வல்லாரோடு கலந்து அவர்கள் ஆதரவு பெறுவிடில் தம் கருத்தைத் தாம் மாற்றிக்கொள்ளவுந் தயாரென்றும் கனம் மந்திரியவர்கள் தெரிவித்தார்கள். தம் கருத்தை மறுத்த தமிழரைச் சாந்தி பண்ணுவதற்காக அவ்வாறு தெளியக் கூறித் தேற்றிய முதன் மந்திரியவர்களே தாம் அழைத்த திரு. சாரநாதையங்காரவர்கள் போன்ற தலை சிறந்த தேசப்பற்றுடைய பல துறைப் புலவர்கள் தங் கருத்தை ஆதரியாததறிந்தும் தாம் முதலிற் கருதியபடியே செய்து விளையும் பயனைச் சோதிக்கத் துணிந்திருப்பதாக மாம்பலத்தில் முடிவு கூறிவிட்டார்கள். அவர்கள் கூறும் வகுப்புகளில் தாய்மொழிக் கல்வியில் சிறுவர்களுக்கு அடிப்படை கூட ஏற்படாதென்பது ஒருதலை. ஓரளவேனும் தமிழறிவு இளைஞருக்கு நிலைபெறுமுன் அந்நியமொழிப்பயிற்சியை பிறபாடங்களுடன் அவர்கள் தலையிற் சுமத்துவது அவர்கள் பருவ நிலைக்குப் பரிவில்லாத வன்கண்மையாம். அதுவேயுமன்றித் தமிழ்ப் பயிற்சி இப்பாடச் சுமையால் தளர்வடைவதும் நிச்சயம்.

தமிழுக்கும் ஹிந்தி மொழிக்கும் எழுத்து, சொல், ஓசை இலக்கண அமைதி, நடைமுறை, கொள்கை, பொருளாக்கம் முதலிய ஒவ்வொரு துறையிலும் உடன்பாடில்லாமையோடு வேறுபாடுகள் மிக மலிந்துள்ளன. தாய்மொழிப் பயிற்சி நிரம்பிய பிறகு அதன் திட்டமும் அதனுடனொத்து நோக்கும் அறிவின் ஒட்பமும் துணையாக்கொண்டு பிறமொழி பயில்வது எளியதாவதோடு இன்பமுந் தருவதாகும். நிலைபெற்ற தாய்மொழிக் கலையறிவிற்குக் கேடின்றிப் பிறமொழியறிவு மொழியை வளம்படுத்த உதவவுங் கூடும். ஒவ்வொரு மக்களின் நாகரிகத்துக்கும் அவர்கள் தாய்மொழியே பற்றுக்கோடும் பயனுமாயமையும் என்பது மறுக்கொணா வுலகறிந்த செய்தியாகும். தமிழரோ இந்திய மக்களின் வகுப்புக்களின் தனி வேறுபட்ட நாகரிகம் தொன்று தொட்டு மேற்கொண்டு கையாண்டு வருபவராவர். ஹிந்தியோ இலக்கணம், சொல்லியல்பு முதலிய ஒவ்வொன்றிலும் தமிழின் வேறுபட்டு, வடமொழித் தொடர்பும் வடநாட்டு நாகரிகச் செறிவும் உடையதொரு மொழியாகும். தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் தாய்மொழியில் கல்வி நிரம்புமுன் எல்லா வகையானுந் தமிழுக்கு வேறுபட்டதும், தமிழருக்கு அந்நிய மொழியானதுமான ஹிந்தியைக் கட்டாயபாடமாகக் கற்க நேரின், தமிழ்ப் பயிற்சியும் தமிழ்க்கலை யுணர்வும் வேரூன்றித் தழைவதற்கு மாறாகப் பிற மொழி வேரும் நிழலுந் தட்டித்தளர்வுபடுமென்பது விவகரியாமலே யாவரும் எளிதி லறியத்தக்க வுண்மையாகும். தாய்மொழிக் கல்வி நிறைந்த பிறகு அதை வளப்படுத்தக் கூடிய பிறமொழிப் பயிற்சி, முதிராத தமிழ்முளையைக் கதிர்தரும் பயிராக வளரவிடாமல்

தடுக்குங் கலையாகி முடியுமென்பதை யறியாதார் மொழிக்கலை யியல்பையே யறியாதாராதல்வேண்டும்.

இனி, சிறு பிள்ளைகளுக்கு ஹிந்தி படிப்பதால் சுமை அதிகப்படுமென்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. எனில், அந்த அதிகச் சுமையை இப்போதவர்கள் படித்து வரும் வேறு சில பாடங்களை நிறுத்துவதால் குறைத்துவிடுவதாய் மந்திரிகள் பேசுகிறார்கள். பொதுவாகக் கல்வி அறிவு வளர்ச்சியை முக்கியநோக்கமாகக் கொண்டுடையது மொழிப் பயிற்சி. அஃது அறிவை ஊட்டுவதற்கும், ஊட்டப்பெற்ற அறிவு பயன்படுதற்கும் கருவியாகும். எனவே, அறிவுதரும் பாடங்களைக் குறைத்தாவது வேறு ஒரு அந்நிய மொழியையுஞ் சிறுவரைப் பயிலப்பண்ணுவது, அவர்கள் கல்வியையே குறைப்பதாக முடியும். அன்றியும் தாய் மொழியல்லாத பிறமொழிப் பயிற்சி தன்னளவில் இளைஞருக்கு இன்பமற்றதும் வருத்தம் தருவதுமாகும். தமிழ்ப்பிள்ளைகளுக்கு இக்கொடுமைகளுக்கிடமான ஹிந்திக் கட்டாயப் படிப்பு எதற்காக வேண்டப்படுகிறது?

இனி, இதுவரை ஆங்கிலம் அந்நியமொழியாயிருந்தும்பயிற்றப்பட்டதே! அதற்குப்பதிலாகத்தானே ஹிந்திவரப்போகிறது. அதனால்புதிதாகப்பெருங்கேடு எதுவுமிராதென்கிறார்கள். ஆங்கிலப்படிப்பு எல்லாச் சிறுவருக்கும் கட்டாயபாடமாயிருப்பது தவறென்று இதுவரைநாட்டில் எல்லாத்தலைவர்களும் போராடினார்கள். இப்போதும்ஆங்கிலத்தை விருப்பபாடமாக்கிவிடுவதாகச்சொல்லுவதும் இதுவரை அதுகட்டாயபாடமாயிருந்தது பிசகென்பதைவிசதமாக்கும். நாட்டுமொழிகளிலில்லாத பிறஅறிவு நூல்களைக்கற்பிக்க உபயோகப்பட்ட ஆங்கிலமே அவசியமில்லை யெனவும், தாய்மொழிகளிலேயே எல்லாக்கலையறிவும் தரவேண்டுமெனவும் ஒப்புக்கொள்ளப்படுமிக்காலத்தில் தமிழில் இல்லாத நலமெதுவுமில்லாத ஹிந்தியைத் தமிழ்ச்சிறுவரெல்லாரையும் வருந்திப் பயிலப் பண்ணுதல் தவறினும் பெருந்தவறாகவன்றோ முடியும்? பிறநாட்டுப் பழக்கத்திற்கு இந்திபயன்படுமதனால் அதைப் பயிலப் பண்ணுதல் அரசியலதிகாரிகளுக்கு அவசியமென்கிறார்கள். இது சிறிதும் பொருந்தாது. முதலில் ஹிந்தியை இந்தியரெல்லாரும் பொதுமொழியாக ஒப்புக்கொள்வார்களா என்பதே இன்னுந் தெளியப்படாதது. ஹிந்தி பல மாகாணங்களில் நடைபெறுவதாகப் பேசுவதும் பிசகு. ஹிந்தி வடநாட்டில் கூடப் பலவேறு பகுதிகளில் வேறுபட்ட பல வுருவங்களையும் பேர்களையும் கொண்டுடையது. ஒரு கிளைமொழி பேசுவோர் பிற பிழைப்பேச்சை எளிதில் அறியக் கூடாமலிருக்கிறார்கள். அன்றியும் வங்காள முதலிய வடநாட்டுமொழிகள் இந்திக்கு மிகவும் வேறுபட்டன. அதனால் ஒருவித இந்தியைக் கற்றதனால் நாம் இந்தியா முழுதும்



அறியப்படும் பொதுமொழியுடையவராகிவிட முடியாது. ஒருகால் அவ்வாறு எல்லாப்பகுதியினரும் ஒருவகை இந்தியைப் பயின்று பேசுவதாக ஏற்படினும் அப்பயிற்சி விரும்புபவருக்கு விருப்பபாடமாகலாமே தவிர, எல்லாருக்கும் கட்டாய பாடமாக்கப்படக் காரணமில்லை. நல்லதெல்லாம் கட்டாயப்படுத்தப்படவேண்டுமா? எல்லாம் கட்டாயமாக வற்புறுத்தப்படுவது மக்கள் உரிமை நாகரிக உணர்ச்சிகளுக்குப் பொருந்தாத அநாகரிக அரசியற் கொடுமையாகுமல்லாமல் உரிமை ஓம்பும் அரசியல் முறையாகமாட்டாது.

இறுதியாக, நாட்டில்ஒற்றுமைக்குறைவும்பிளவுணர்ச்சிமாறுபாடுகளும், பேசப்படும் பலமொழிகளாலிதுவரை விளைந்ததில்லையே! சமயப்பேராலும் பிறபல காரணங்களாலுமல்லவா சண்டைகளும் சச்சரவுகளும் நிகழ்கின்றன. எல்லாரும் ஒரேமதமேற்கொண்டு தீரவேண்டுமென்று சமாதான நலங்கருதி யாராவது சொல்லத்துணிவார்களா? ஆகையால் ஏதோ சிலருக்குச் சிறிது நலம் வரலா மென்பதற்காக எல்லா இடங்களிலும் எல்லாப் பிள்ளைகளையும் அந்நிய மொழியொன்றைப் பயிலப் பண்ணுவதும் அறிவுக்கும் சரித அநுபவத்துக்கும் பொருந்துவதன்று. பலமொழிகள் பயிலும் நாடுகள் பலவுள - பலமொழி பயின்றவர் சிலருளர் - எனில் இருமொழிகள் ஒரு பெருநாட்டுப் பல மாகாணங்களி லுள்ளார் எல்லாரும் பயின்று தீர வேண்டு மென்னுங் கொடுமை இழைக்கத் துணிந்த வல்லரசு, உலகமக்கள் சரிதத்தில் இதுவரை எங்கும் தோன்றியதில்லை. இவ்வளவு வன்கண்மை காட்டியாவது தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயபாடமாக்குவானேன்? இந்தியைப்போல வடமொழித் தொடர்பு மிக்கனவாய், இந்திக்குச் சிறிது இயலியையபுமுடைய பல பிறமொழிகள் பேசும் மாகாணங்களில் எல்லாம் இன்னும் காங்கிரஸ் மந்திரிகள் இந்தியைக் கட்டாய பாடமாக்க முடியாத நிலையில், தமிழ்நாட்டுத்தலைவரான கனம் முதன் மந்திரியும் அவர்களினத்தவரும் தமிழ்நாட்டில் இந்தியை இவ்வளவு விரைவாகக் கட்டாய பாடமாக்கத் துணிவானேன்? இதுபோன்ற சில கேள்விகள் கேட்போருக்கு இதுவரை தக்கவிடை தரப்படவில்லை. அதனால், இந்தியை வற்புறுத்தமுயற்சி வடமொழிக்கும், அம்மொழியினருடைய நாகரிகத்துக்கும் வேறுபட்ட தமிழைத் தளரப் பண்ணவும், தமிழ் நாகரிகத்தைப் பழிப்பதற்கும் ஏற்ற சூழ்ச்சியெனத் தமிழ் மக்கள் ஐயப்படுதற்கும் இடமுண்டாகிறது. வடமொழியை விடாது பயின்று வரும் ஒரு வகுப்பினருக்கு வடமொழியின் பாகதமான இந்தி பயிலுவது எளிதும் மினிதுமாயிருக்கும். வடமொழிக்கு முற்றிலும் வேறுபட்ட தமிழ் மொழியுடையாருக்கு அதே காரணத்தால் அத்தமிழர்க்குப் புறப்புற அந்நிய மொழியான இந்தி இன்பமற்றதும் இலேசல்லாததுமாகும். இதன் உண்மை வட நாட்டவருள் தமிழைப் பயில முயல்வார்படும்பாட்டால் விளக்கமாகும். ஆகவே அவர் மொழியைத்தமிழர் பயில்வதிலும் அதே வருத்த மேற்படுமென்பது சொல்லவும் வேண்டுமா? இளம் பருவத்தில் இப்பிறமொழிப் பயிற்சியைப் பள்ளிகளில் கட்டாய

பாடமாக வற்புறுத்துவது ஒரு சிறு வகுப்பினருக்கு நன்மையும், தமிழ் மக்களுக்குப் பொதுவாக நலக்குறைவும் விளைக்குமென்பது வெள்ளிடைமலையேயாகும். இதுவரை இந்தி பயின்றிருப்பவருள் ஒரு வகுப்பினரே மிகப் பலராதலாலும், இம்முயற்சி உடனே பல்லாயிரப் பள்ளிகளில் ஹிந்தி உபாத்தியாயராகப் பதவியும் வேதன உதவியும் பெறுதற்குச் சாதகமாகுமென்பது வெளிப்படை. எனவே, இம்முயற்சி தற்போது இந்நாட்டு மக்கள் வகுப்புக்களுள்ளிருந்துவரும் இசல், நம்பிக்கையின்மை வேறுபாடுகளைக் குறைப்பதற்கு மாறாக, மேலுமவற்றை வளர்ப்பதாக முடியும்.

இதனினும் கேடு இன்னுமொன்றுளது. தமிழ் மாகாணத்திலேயே இனி என்றும் தமிழ்மட்டும் பயில்பவருக்குவேலைகிடைப்பதரிது. இந்திப் பயிற்சியுடையவருக்கே பல நலமும்பல்கும் என்ற கருத்தைக் கனம் முதன் மந்திரியவர்களே வற்புறுத்தி வருகிறார்கள். இஃதொன்றே இந்தியைத் தமிழர் மறுப்பதற்குப் போதுமானதாகும். பிற மாகாணங்களிற் பழகிப் பதவி முதலியன தேடுவார் செயல் எதுவேனுமாகட்டும். தமிழகத்தில் தமிழருக்குத் தமிழ் மட்டுமே போதுமானதாக இருத்தல் வேண்டும். அது மட்டுமன்று. தமிழ் மாகாணத் தளவில் அங்குத் தங்கும் பிறமொழியாளர் எல்லாரும் தமிழ் கற்றுத் தீரவேண்டும் என வற்புறுத்தபடுவதே முறையும் அறமுமாகும். ஒவ்வொருமாகாணத்திலும் அம்மாகாணத்தாரின் தாய்மொழி எல்லாருக்கும் பள்ளிகளிலும் பொதுமன்றங்களிலும் கட்டாய மொழியாக்கப்படல்வேண்டும்.

இனி, தமிழ் ஆரியமென நாகரிக வேறுபாடு கிடையாதென்பார் உண்மையுரைப்பவராகார். நாகரிகம் மொழி இயல்புகலையுணர்வுகளால் வடவாரியரும் தென் தமிழரும் தொன்றுதொட்டு மாறுபாடின்றிவேறுபட்டவராகவே இருந்து வருவது உலகறிந்த சரிதவுண்மை. அவ்வேறுபாடுகளை மறுப்பது பொய்; மறைப்பது முடியாதாகும். அழித்தொன்றாக்க முயல்வதோ பகைவளர்ச்சியும் கொடுமையுமாகி முடியம். ஒவ்வொரு மக்கள் வகுப்பினரும் தத்தம் நாகரிகம், கலையுணர்வு, மொழி ஏற்றங்களை ஓம்பி வளர்த்து உலகச் செல்வத்தை நிறைப்பதுவே முறைமையாகும். இதற்கு மாறாக அந்நிய மொழிப் பயிற்சியை வற்புறுத்தித் தமிழரது பழைய நாகரிகத்தையழிக்கு முயற்சியை எதிர்ப்பது தமிழரானவருக்கும் தலையறமாகும்.

மக்கள் வகுப்பினருள் ஒற்றுமைநலம் விழையத்தக்கதே. எனில், வேறுபாடெதுவுமில்லாத ஒற்றுமையினை வளர்க்க முயல்வது விழலுக்கிறைக்கும் நீராகும். ஒவ்வொரு வகுப்பினரின் உடைமை உரிமைகளை மற்ற வகுப்பினர் மதித்துப் பாராட்டுவதால், எல்லார்க்கும் நட்பும் ஒற்றுமையும் செழித்துவளரும். முகமன்பேசி முடிதுளக்கி, அடியறுத்துக் குடிகெடுக்கும் சூழ்ச்சிகள் அருவருப்பும் அறவெறுப்பு மூட்டிப் பகையொடு பலகேடுகளையும்விளைப்பனவாம். ஆகவே, தமிழகத்தில்தமிழையெல்லாருக்கும் முதலில் கட்டாய பாடமாக்குவதொன்றே அரசியலார் கடமையாகும். அந்நிய மொழி எதுவே ஆயினும் அதற்கு ஆக்கமும் நிலைக்களமும் உதவுவது தமிழர் நலக்கேடு சூழும் பாவமும் பழியுமாகும். (சித்தாந்தம்)

---

சிவநேசனுக்கு

# வாழ்த்தும் மதிப்புரையும்.

சென்னை, மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ. வே. சாமிநாதையரவர்கள்:—

'சிவநேசன்' பத்திரிகையைப் பார்த்து, மிக்க ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அடைந்தேன். சிலமாதங்களாக, வெளிவராமலிருந்த இப்பத்திரிகை அரிய பல விஷயங்களைப்பெற்று, வெளிவராமலிருந்த குறையை நீக்கி மிளிர்கின்றது. பல விஷயங்களை பொருங்கே சேர்த்துப் பார்க்கும்போது மனத்துக்கு மிகவுந் திருப்தியாக விருக்கின்றது.

ஆலங்குடிவாழ் அந்தணாளரும் செந்தமிழ்ச் செல்வருமாகிய பண்டித, அ. கோபாலையரவர்கள்:—

ஆறுமாதமாகச் சிவநேசனைக் காணாமலும், இட்டப்படி அவன் திட்டைக்கெழுந்தருளினமையறியாமலும் கவலையுற்றிருந்தேன். தைமீ மூகூ அவன் என்னிடம் வந்து தன்னின்முகங் காட்டி எல்லாந் தெரிவித்துக் கவலையைப் போக்கி மகிழ்வித்தான். அவன் தெரிவித்த உள்ளூர்ச்செய்தியில் "சிவசந்நிதித் திருக்குளத்தைப் பாதுகாக்கும் நிமித்தம்......அதன் றென்பாற் குளமொன்று தோண்டப்பெறுகிறது" என்பது தெரிந்தவுடன் திருப்பணியாளரின் மதிநுட்பச் செயலை வியந்து, திருவருளைச் சிந்திக்கலானேன்.

காசிவாசி சாம்பவஸ்ரீ சிவசெந்திநாதையரவர்களின் இளவல் ஏழாலை, சாம்பவஸ்ரீ சி. சம்புநாதையரவர்கள்:—

திட்டை ஸ்தலத்திலே "சிவநேசனை" நடத்துவதறிந்து பெருமகிழ்ச்சியுடையேன்.

கோடிமாடச்செங்குன்றூர்,சிவஸ்ரீபண்டித, தி. நா. அர்த்தநாரீசுவரக் குருக்களவர்கள்:—

நம் சிவநேசன் நீடூழிவாழ அர்த்தநாரீசுவரர்அடிமலரிணைகளில் தை வெள்ளியில் அஷ்டோத்திரம் செய்து விபூதி குங்குமம் அனுப்பியிருக்கிறேன். சிவநேசன் அச்சியந்திரத்திலணிந்தும், சிவநேசச்செல்வர் பலருமணிந்தும் பலன் பெறவேண்டுகிறேன்.

(கம்பை, தமிழ்ப்பண்டிதர், திரு, வ. மு. இரத்தினேசுவரையரவர்கள்)

நதிபெருகு சீர்ப்பலவான் குடியிற் றோன்றி
நவநெறிகள் சாராமே நன்மை சார்ந்து
அதிபெருகத் தாங்கிநிமிர் சிவந்தொண் டாற்றித்
தூயபல போதனைகள் துலங்கச் சாற்றி
மதிபெருக வருமாதச்சிவ நேசன் றன்
மாட்சிதனைப் புகலவெளி தாமோ வெப்
பதிதிட்டை என்பதனாற் பாரிலென் றும்
பகர்வரிய திருவுடனே வாழ்கமன்னோ.

தண்டமிழ்தேர் செல்வர்பலர் செப்புகின்ற
தகுமுறைகள் தாங்கியின்பத் தொருவா நோக்கித்
தண்டமிழ் நாடெங்கணுமே தழைப்பச் சைவம்
தனியரசை நாட்டிவரு சிவநேசன் றன்
தண்டமிழிற் பலநூல்க டழைக்க நீடு
தகுபதி யெனவாழத் தகைமைசான்ற
தண்டமிழைத் தரணிமிசை நாட்டுஞ் செவ்வேள்
சரணமலர் கரணமுற வழுத்துவாமே.

திருவருட் செறிவால் பத்தாண்டுகளாகச்செந்தமிழும் சைவத் திருநெறியுஞ் செழிக்கத் தொண்டாற்றிவரும் "சிவநேசன்" பன்னூட்களாக இவண் வாராமையால் வருந்தினேன். அஃது பதினோராட்டைப் பருவத்தில் பற்பல பொருட் செறிவான கட்டுரையோடு களிப்புற என் காத்தாயது பத்திரமும் பத்திராதிபரும் நலம்பல திகழ்ந்துவாழச்செம்மேனி எம்மான் மகிழுஞ் செவ்வேளை வழுத்துகின்றேன்.

தேவகோட்டை திருவாளர், வெ. ஆ. தி. சிதம்பரஞ் செட்டியாரவர்கள்:—

'சிவநேசன்' பத்திரிகையைத் திட்டைத் தலத்தில் ஈசன் றிருப்பணியோடு நடைபெறும்படி நாட்டியதானது 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்ற தக்காருரைப்படி. மேன்மேலும் மிக்க ஆக்க முடையதாகும்.

புதூர்சேங்கம், பிரசங்கமணி, திரு, இராஜம்பிள்ளையவர்கள்:-

தென்னாட்டுக்கோர் திலகமென 'சிவநேசன்' என்னும் பத்திரிகை நடத்துவதைப் பாராட்டுகின்றேன்.

உ

# மதிப்புரை மஞ்சரி.

தில்லைக் கற்பவிநாயகர் சதகமும் தோத்திரம் எழுபதும்:—

தேவகோட்டை, தின்னாப்பச் செட்டியார் வகையினராகிய திருவாளர், வெ. ஆ. தி. மா. சிதம்பரச் செட்டியாரவர்கள் கட்டளைக் கலித்துறையாக விநாயக புராணவரலாறுகள் பல அமைத்து இயற்றி சில செய்யுட்களுக்கு உரையும், அரும்பதப்பொருள், மேற்கோள், காரணவகை ஆகியவைகளும் வரைந்து நல்லகாகிதத்தில் பதிப்பித்து (கிரௌன்1-க்கு16) 116-பக்கங்களுள்ள புத்தகமாக்கி அழகான கெட்டிக் கட்டிடம் செய்து யாவரும் படித்தின்புறும்படி வெளியிட்டுதவியுள்ளார்கள்.

அடியரிடர் தீர்த்தருளும் ஆனைமுகவன்றன் அடியிணை மலர்களை அனவரதம் போற்றும் உத்தம சீலராகிய வித்தகப்பெரியார் சிதம்பர ஐயா அவர்கள் தெரிசிக்க முத்திதரும் சிதம்பரக்ஷேத்திரத்தை நித்திய வாசமாகக் கொண்டுள்ளார்களாதலின் அங்குள்ள கற்பக விநாயகரைப்பொற்புறத்துதித்து துயர்கெடுத்தாள வேண்டிக் கொள்வதாகும். இப்புத்தகத்தை அன்பர் அனைவரும் பெற்றுப் பாராயணஞ் செய்து கற்பகவிநாயகர் திருவருளால் துயர் நீங்கிச் சுகமுறலாம்.

அரங்கேற்றம்:— சிதம்பரக்ஷேத்திரத்தில் ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமானுக்கு, தேவகோட்டைத் திருவாளர், வித்வசிகாமணி, வெ. ஆ. தி. மா. சிதம்பரச் செட்டியாரவர்கள் தில்லைக் கற்பகவிநாயகர் சதகம் எனவும், தில்லைக் கற்பகவிநாயகர் தோத்திரம்எழுபது எனவும் 2-நூலியற்றி,நாளிது ஈசுவர வருஷம் தைமீ கஉ தொடங்கி மஹாபிஷேகாதிகள்செய்வித்தும், அஉ சுக்கிரவார சுபதினத்தில் அப்பெருமான் சந்நிதியில் வித்வஜந பக்தஜன ஸமூகத்தில் "ப்ரபூதஹவிஷ்" எனச் சிவாகமத்தில் விசேஷமாகக் கூறப்பெற்றுள்ள சர்க்கரைப் பொங்கற் பாவாடை நிவேதனஞ் செய்வித்தும் விமரிசையாக அரங்கேற்றினார்கள். ஸ்ரீ விநாயகப்பெருமான் டை செட்டியாரவர்கட்குத் தீர்க்காயுளையும் அரோக திடகாத்திரத்தையும் தர்மாதி சதுர்வித புருஷார்த்தங்களையும் அநுக்கிரகிப்பாராகவென, தேவார பாடசாலை உபாத்தியாயர் திரு, என். இராமலிங்க ஓதுவார் தெரிவிக்கிறார்.

அழகர் கிள்ளைவிடுதூது:— பரஞ்சோதியார் அருளிய திருவிளையாடற் புராணத்திற்குரிய சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் இயற்றிய பெருமை வாய்ந்த பல பட்டடைச் சொக்கநாத பிள்ளை அவர்கள் இயற்றியது. காப்பு வெண்பாவுடன் 239 கண்ணிகளையுடையது. சென்னை மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்திய கலாநிதி, டாக்டர், உயர்திரு, உ.வே. சாமிநாதையரவர்கள் மிகமுயன்று இந்நூலின் ஏட்டுப் பிரதிபல தேடிப்பெற்று இந்நூலைச் செப்பனிட்டு முகவுரை, ஆசிரியர் வரலாறு, நூலாராய்ச்சி மூலமும் குறிப்புரையும், அரும்பதம் முதலியவற்றின் அகராதி ஆகியவைகளைத் தெளிவாக நல்ல காகிதத்தில் அச்சியற்றி(டிம்மி1-க்ரு8)44 பக்கங்களுள்ள புத்தகமாக வெளியிட்டுதவியுள்ளார்கள். திருமாலிருஞ் சோலைமலையின் சிறப்பு முதலியன செறிந்து பொருளமைதி மிக்கதாயுள்ள இந்நூல் தமிழ் நலந்துய்க்கும் ஒவ்வொருவரும் படித்து இன்புறத்தக்கது. இதன் விலை அணா 0—8—0. 'தியாகராஜ விலாசம்' திருவேட்டீசுரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை. என்ற இடத்தில் ஐயரவர்கள்பாற் பெறலாம். இந்நூலையும் இது போன்ற பன்னூல்களையும் தமிழுலகுக்கு வெளியிட்டுதவும் ஐயரவர்களின் பெருந்தகைமை பெரிதும் பாராட்டற்பாலது.

சிவாகமோக்த சஷ்டியப்த பூர்த்தி சாந்தி தீபிகை:— இது காரைக்குடி, சிவநேசத் திருவாளர்,கும. ராம. நாராயணஞ் செட்டியாரவர்களுக்கு ஈசுவரஞு மார்கழிமீ 29வ நடைபெற்ற அறுபதாண்டு நிறைவின் கிரியை முறைகளை வரிசைக் கிரமமாகக் கொண்டது. சிவாசாரியர்களும், கவிராயரும், சிவமகாயாக நிர்வாகர், தேவகோட்டை,திருவாளர்,தி.அ. சு.அ. சுப்பிரமணியஞ்செட்டியாரவர்களும் சேர்ந்து இயற்றி வெளியிட்டது. பலரும் பின்பற்றுதற்குரியது.

வடமொழி வாழ்த்துப்பாவும் தமிழ் உரைவாழ்த்தும்:— தேவகோட்டை, திருவாளர் தி. அ. சு. அ. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள்வேதாரண்யம்ஸ்ரீவேதநாயகி சமேத வித்தியேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் சிவமகாயாக நிர்வாகத்தைப் பாராட்டி சிவாச்சாரியர்களின் ஆய்ஞையின்படி சிவஸ்ரீ தி. ம. சாமிநாத சிவாசாரியாரவர்கள் இயற்றியது.



வசதி:— பல தருமசாலைகள் இருக்கின்றன. சிருங்ககிரிமடம் ஒன்றும், நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரமும், விடுதியும் உள்ளன.

நதி:— கோதாவரி ஆறு ஓடுகிறது. அதில் இராமகுண்டம், இலக்ஷ்மண குண்டம், சீதா குண்டம், அநுமார் குண்டம் என்னும் குண்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. இராம குண்டம் மிக்க சிறப்புடையதாகும். இங்கு பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை மேளா என்னும் விசேஷம் கொண்டாடுவார்கள்.

ஆலயம்:—கோதாவரிஆற்றின் சமீபத்திலேயே கபாலீஸ்வரர் ஆலயம் மிக விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. இதன்றிக் காளிதேவி கோவில் ஒன்றும், இராமர் கோவில் ஒன்றும் இருக்கின்றன. பல சிறு கோவில்களும் உள்ளன.

பார்க்கவேண்டியவைகள்:— சீதா குகை, இது பஞ்சவடியின் கீழ்த்திசையில் உள்ள ஒரு சிறு குகை. அதில் இராமர், இலக்ஷ்மணர், சீதை ஆகிய மூவர் உருவங்களும் இருக்கின்றன. சீதா குகைக்குக் கிழக்கே சிறிது தூரத்திலுள்ள தோப்புக்களை இருடிகள் தபசு செய்த தபோவனம் என்று சொல்லுகிறார்கள். இங்கிருந்து கிழக்கே சுமார் அரைமைல் தூரத்தில், கபில நதியின் நடுவில் இலட்சுமணர் சூர்ப்பநகையின் மூக்கை அறிவதுபோற் சிலையினால் செய்யப்பட்டு இருக்கிறது. இதனைச் சூர்ப்பநகைக்கு பங்கஞ் செய்த இடமென்று சொல்லுகிறார்கள். இலட்சுமணர் சூர்ப்பநகையின்நாசியை அறுத்ததனால் இவ்வூருக்கு நாசிக் என்று பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. பஞ்ச பாண்டவர் குகை என்பது சுமார் நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. அதில் புத்தர்போன்ற பல வடிவங்கள் இருக்கின்றன. அங்கு மிகப் பெரிய பல குகைகளையுங் காணலாம்.

## 11. திரியம்பகம்.

நாசிக் பஞ்சவடியிலிருந்து திரியம்பகம் மேற்கே சுமார் 18 மைல்தூரத்திலுள்ளது. பஞ்சவடியிலிருந்துவாடகைமோட்டார்கள் போய்வருகின்றன. போவதற்கு மோட்டார் வாடகை 0—8—0. இவ்வூரிலும் நாசிக் பஞ்சவடியைப் போலவே யாத்திரை வருபவர்களிடம் ரூ 0—4—0 பெற்றுக்கொண்டு உள்ளே விடுகிறார்கள்.

வசதி:— பலதருமசாலைகள் இருக்கின்றன. எல்லா வசதிகளும் உள்ளன.

நதி:— கோதாவரி ஆறு மிகச் சிறு வாய்க்கால் போல வருகிறது. குசாவர்த்தன குண்டம் என்னுந்தீர்த்தம் பிரதானமாகும். தீர்த்தத்தைச் சுற்றிப் பல மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. திரியம்பகேசுவரர் ஆலயத்தின் பின் புறத்திலும் ஒரு தீர்த்தம் இருக்கிறது.

ஆலயம்:— திரியம்பகேசுவரர் ஆலயம் மிகப் பிரதானமானதாகும். இது துவாதச ஜோதிர்லிங்கங்களுள் ஒன்றாக எண்ணப்படுகிறது. ஆலயத்தில் இலிங்க ஆவுடையார் ஒன்று மிகப் பெரியதாகக் காணப்படும். அதன் மத்தியிலுள்ள குழியில் நீர் ஊறி வந்துகொண்டிருக்கின்றது. குழியின் நீரை யிறைத்துவிட்டாலுள்ளே, பிரமலிங்கம், விஷ்ணுலிங்கம், சிவலிங்கம் என மூன்று இலிங்கங்களை அக்குழியினுட் காணலாம். இந்த ஆலயத்துக்கருகிற் பல ஆலயங்களிருக்கின்றன.

பார்க்கவேண்டியவை:— திரியம்பகம், மலையடிவாரத்தில் இருக்கிறது. மலையினின்று வருங்கோதாவரி ஆறு குசாவர்த்தன குண்டத்தில் நுழைந்து வெளியாகிறது. கோதாவரி உற்பத்தியாகும் இடத்திற்கு மலைமீது சுமார் மூன்று மைல்தூரமேறிப் போகவேண்டும். அங்கே போவதற்கு டோலிகளின் வசதியும் உண்டு. உற்பத்தியாகும் இடத்தில், கௌதமரிஷியின் கைக் கமண்டலத்தின் சிறு துவாரத்திலிருந்து கோதாவரி வெளியாவது போல அமைக்கப்பட்டிருக்கிறது.

## 12. ஓங்காரம்.

நாசிக்ரோட் என்னும் ஸ்டேஷனிலிருந்து மோர்டக்கா என்னும் ஸ்டேஷன் 275 மைல். சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 4—9—0. நாசிக்ரோட் ஸ்டேஷனிலிருந்து மன்மாடு, புஷாவல், காண்டுவா முதலிய ஜங்ஷன் வழியாக வந்து காண்டுவா ஜங்ஷனில் G. I. P. இரயில்வேயை விட்டு B. B. & C. I இரயில்வேயில் வேறு வண்டிமாறி மோர்டக்காவிற்கு வரவேண்டும். இது ஒரு சிறு ஸ்டேஷன். ஸ்டேஷனிலிருந்து சுமார்



7-மைல் தூரத்தில் ஓங்காரம் இருக்கிறது. வண்டிகள் கிடைக்கும்; மோட்டார்களும் ஏகதேசங்களில் போய் வருகின்றன. ஓங்காரம் சிறு ஊராக விளங்குகிறது.

வசதி:— ஆற்றோரத்தில் ஒரு தருமசாலையிருக்கிறது. தங்குவதற்கு வசதியாக இருக்கும். இதன்றி ஆற்றின் அக்கரையிலும் வேண்டிய வசதி செய்து தருகிறார்கள்.

நதி:— நருமதையாறு கிழக்குத் திசையிலிருந்து மேற்காகச் செல்லுகிறது. ஆற்றின் இரு கரைகளும் உயர்ந்த மலைகளாகவிருக்கின்றன. இடையில் ஆறு மிகுந்த வேகமாகச் செல்லுகிறது. நருமதையாற்றில் பாணலிங்கம் எடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த நதியில் மூழ்குவது மிக விசேஷம். புண்ணிய நதிகளில் இந்த நருமதை நதியுமொன்று.

ஆலயம்:— ஓங்காரேஸ்வரர் ஆலயம் ஆற்றின் அக்கரையிலிருக்கிறது. அது ஒரு மலைச் சரிவிலே அமைந்து விளங்குகிறது. ஆலயத்திற்கு இக்கரையிலிருந்து போவோர் ஓடத்தில்தான் செல்லவேண்டும். பாலங்கிடையாது. ஆற்றைக் கடந்து ஆலயத்தின் வாயிலை அடையவேண்டும். ஆலயம் மேற்குமுகமாக விளங்குகிறது. ஆலயத்தின் வாயிலில் ஒரு விநாயக மூர்த்தி இருக்கிறது. அதன் பின் ஆலயத்தின் எதிர்முகமாக இருடபதேவர் உருவம் ஒன்றும் உண்டு. அதையும் கடந்து ஆலயத்தில் நுழைந்தால் தெற்குப் பக்கம் ஒரு குகை போன்று வழி செல்லுகிறது. அது உள்ளே சிறிய மண்டபமாகக் காணப்படும். அங்கு ஓங்காரேஸ்வரர் இலிங்க ரூபமாக எழுந்தருளி விளங்குகிறார். இலிங்கத்தைச் சுற்றி வெள்ளியினால் ஒரு தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. இலிங்கத்தினை யொட்டி ஓரத்திற் குழியான பாகத்தில் இருந்து நீர் ஊறி வருகிறது. வில்வபத்திரமுந் தீர்த்தமுங்கொண்டு பூசிப்பது வழக்கம்.

இதன்றி ஓங்காரேஸ்வரர் எழுந்தருளியிருக்குங் குகை போலவே அதன் எதிரிலும் ஒரு குகைபோன்ற வாயில் காணப்படும். அதனுள் ஓர் மகரிஷியும் மற்றும் இலிங்கமும் பல மூர்த்திகளும் இருக்கின்றன. அங்குள்ள ரிஷி வடிவத்தை நருமதையைத்

தவஞ் செய்து வரவழைத்த சுகப் பிரம ரிஷியென்று சொல்லுகிறார்கள். ஆலயத்தின் வெளிப்பகுதியில் வடக்கே ஒரு அரசர் வடிவம் உண்டு. அது நின்ற வண்ணம் பெரியதாகக் காணப்படும். பிரகாரமாகச் சென்றால் ஆலயத்தின் மேலே போகலாம். அங்கு நடுவின்கண் ஒரு இலிங்கமும்; அதினின்று அதற்குமேலும் சென்றால் அங்கு ஒரு சிறு இலிங்கமும் காணப்படும். கீழ்ம் மண்டபத்தின் மேலும் உள்ள இம்மூர்த்திகளேயன்றி இன்னும் பல மூர்த்திகளும் இருக்கின்றன. ஆற்றின் இக்கரையிலே ஆற்றோரத்தில் ஒரு விஷ்ணுவாலயமும் இருக்கிறது. ஓங்காரத்திலிருந்து சென்ற வழியே மோர்டக்கா ஸ்டேஷனுக்கு வந்துவிடவேண்டும்.

## 13. உஜ்ஜயினி.

மோர்டக்கா ஸ்டேஷனிலிருந்து உஜ்ஜயினிஜங்ஷன் 89-மைல். சாதாரண மூன்றாவது வகுப்பு வண்டிக்குச் சார்ஜ் ரூ 1—8—6. B. B. & C. I. இரயில்வே.

வசதி:—ஜங்ஷன் ஸ்டேஷன் அருகிலேயே ஒருபெரிய தருமசாலை இருக்கிறது. எல்லாவித வசதியும் உள்ளது. இதில் ஏழைகட்குஞ் சாதுக்களுக்குஞ் சதாவர்த்தியுஞ் சமைத்துச் சாப்பிடுவதற்குப் பாத்திரங்களுந் தருகிறார்கள். இதுவன்றி இன்னும் பல தரும சாலைகளும் இருக்கின்றன.

நதி:— ஊருக்கு மேற்கே க்ஷிப்ரா என்னும் நதி ஓடுகிறது. அந்த நதியில் சூரியகுண்டம் என்னும் இடத்தில் ஸ்நாநஞ்செய்வது மிக விசேஷம்.

ஆலயம்:— சூரிய குண்டத்திற்குக் கொஞ்ச தூரம்தெற்கில் ஆற்றோரத்தில் இராமநாதர் என்னும் இலிங்கம் இருக்கிறது. அங்கிருந்து கிழக்கே சிறிது தூரத்தில் காளியாலயம் ஒன்று உண்டு. இந்தக் காளி மிக விசேஷமுள்ளதாகச் சொல்லுகிறார்கள். காளியாலயத்திலிருந்து சுமார் இரண்டுமூன்று பர்லாங்கு தூரம் வந்தால் மஹா காளேஸ்வரர்ஆலயத்திற்கு வந்துவிடலாம். அங்கு தடாகம் போன்ற தீர்த்தம் ஒன்று இருக்கிறது. தீர்த்தத்தின் அக்கினி மூலையில் ஒரு வழி செல்லுகிறது. அவ்வழியே சென்றால் மஹா காளேஸ்வரர் எழுந்தருளியிருக்கும் மண்டபத்திற்குப் போகலாம்.



சிவநாமங்களாலேயே விளக்கிப்போதல் காண்க. இன்னும் த்ரிபாத் விபூதி மஹாநாராயணம் 'குணாதீத சுத்த ஸத்வ மயோ ......வைகுண்ட:.......' என்றது. இதனால் வைகுண்டம் குணாதீதமும் சுத்த சத்வ மயமுமாமென்பது தெரிகிறது. இவ்விடத்தில் குணாதீதமென்பதற்குக் கெட்ட குணங்கள் கலவாதது என்றவளவிற் பொருள்படும். கெட்ட குணங்களாவன ராஜஸமும் தாமஸமுமாம். ஸத்வ மொன்றே நல்ல குணம். சத்வமென்பதும் சுத்த சத்வமென்பதும் ஒன்றே. சுத்த பதம் ஆண்டு ஒரு விசேடணமுங் குறியாதது. ஆகவே வைகுண்டம் ஸத்வமயமான பதமென்னும் பூர்வபட்சம். ஆனால் ந்ருஸிம்ஹோத்தரதாபிநி 'அஸத்வ மராஜஸ்க மதமஸ்க மமாய மபயம்' என்று ஸத்வத்தையும் நிந்திக்கின்றது. 'குணத்ரய மநீதம்' என்ற யோகசிகையும், 'குணத்ரயாதீத:' என்ற கைவல்யமும், 'த்ரிகுண ரஹிதம்' என்ற சுகரஹஸ்யமும் ஸத்வத்தை மற்ற இரு குணங்களோடு சேர்த்து ஒதுக்கியதறிக. அத்தகைய ஸத்வமய வைகுண்டத்தைத்தான் அம்மஹாநாராயணம் வெகுவிதமாக வர்ணித்தது. அவ்வர்ணனையெல்லாம் அப்பதத்துக்குத் தன்னிற் கீழிட்ட பதங்களைநோக்க வாஸ்தவமும் மேலிட்ட ருத்ரபதமுதற் சிவபதம்வரை நோக்க உபசாரமுமாமென்க. அன்றியும் 'வைகுண்டம் ஸ்வர்கவாஸிநாம்' என்று வைகுண்டத்தை இந்திரலோக முதலிய சுவர்க்கங்களோடு சேர்த்துத் தள்ளியது க்ருஷ்ணம். அவ்வுபநிஷத்துத்தானே விஷ்ணுவை நோக்கி 'ஸாக்ஷாந் மாயா விக்ரஹ தாரண:' என்றும், த்ரிபாத் விபூதி மஹாநாராயணம் 'மாயோபாதிகோ நாராயண ஆஸீத்' என்றுங் கூறின. அவற்றால் விஷ்ணு மாயாசரீரி யென்பதுந் தெளிவு. அங்ஙனமாக அவனுலகு மாத்திரம் அமாயமாயிருப்பது யாங்ஙனம்? ஆகவே மோக்ஷம் சிவபதமொன்றே யன்றி வைகுண்டமாதி வேறெவையு மன்றென்பது வஜ்ரலேபமாகும்.

இந்நிருபணத்தில் எடுத்தாளப்பட்ட சுருதி வசனங்களனைத்தும் மேலுண்மைக்கு மூலவசனங்கள்.

இனி அவ்வுண்மை பற்றிய ஆக்ஷேப சமாதானங்கள் வருமாறு:—

1. ஆ:— விஷ்ணு பதமொன்று தவிர மற்றைப் பதங்களெல்லாம் அழிவுடையன. ஆகலின் விஷ்ணுவே நித்தியமோக்ஷத்துக்குக் கர்த்தா.

ச:— விஷ்ணுபதம் அழிவுடையதென்று மேற் சுருதியாற் காட்டப்பட்டது. எந்தப் பதங்களிற் சென்றவர்க்கு உலகை நோக்கி மீளத்திரும்புதலுண்டோ அந்தப் பதங்களே அழிவுடை

யன. எந்தப் பதத்திற் சென்றவர்க்கு அம்மீட்சியில்லையோ அந்தப் பதமே நித்தியமுக்திஸ்தானம். பாரதத்தில் ஆச்வமேதிக பர்வத்தில் வைஷ்ணவ தர்ம பர்வமென்றோருட்பகுதி யுண்டு. அதனை வியாஸப்ரோக்தமா இடைச் செருகலாவென்று சந்தேகிப்பர் சிலர். பூர்வபட்சத்துக்கு அது வியாஸப்ரோக்தமென்பதே கருத்து. அஃதப்படியே யிருக்கட்டும். ஆச்வமேதிகம் 101-வது அத்யாயம் '(அவன்) என்னுடைய உலகம் சென்று......கோடி வருஷம் விளையாடிக் கொண்டிருந்து....அவ்விடத்திலிருந்தும் நழுவி இவ்வுலகில் .....பிராமணனாகப் பிறப்பான்' என்றும், 103-வது அத்தியாயம் 'அவன் அறுபத்தாறாயிரம் வருஷம் என்னுடைய லோகத்தில் பூஜிக்கப்படுகிறான்; என்னுடைய உலகத்திலிருந்து இறங்கியும் இவ்வுலகில்.........பிராம்மணனாகப் பிறக்கிறான்', 'அவனும் .....என்னுடைய லோகத்தை அடைந்து அவ்விடத்தில் இஷ்டமான ரூபத்தை அடைந்து முப்பதுகோடி வருஷம்...... ஸந்தோஷமடைந்த பிறகு, இந்த மானிடலோகத்தில்.........பிராம்மணனாகப் பிறப்பான்', 'எவன் சித்தத்தை என்னிடத்தில் வைத்து அக்னிப் பிரவேசம் செய்கிறானோ அவனும்.........என்னுடைய உலகத்தை அடைந்து...... எப்பொழுதும் என்னையே தரிசித்து என்னுடைய ஸந்நிதியில் முப்பதுகோடி வருஷம் ஸந்தோஷமடைந்து, காலமானவுடன், அவ்விடமிருந்து இறங்கி......பிராமணனாகப் பிறப்பான்', 'எவன்......என்னைச் சரணமடைவனோ அவன்........என்னுடைய உலகத்தை அடைந்து கோடி வருஷம் ஸந்தோஷிக்கிறான்; என்னுடைய உலகத்திலிருந்து இறங்கியும் இவ்வுலகில் அரசனாகப் பிறப்பான்' என்றும் சொல்லின. இவைகளெல்லாம் அங்குக் கிருஷ்ணனுடைய வாக்கியங்களாகும். இவற்றால் வைகுண்ட பதவியிற் சென்றவர்க்கு மீளவும் இவ்வுலகிற் பிறப்புண்டென்பது நிச்சயமாயிற்று. ஆகவே விஷ்ணு நித்ய முக்தியருள்பவ ரென்பது பொய்ப்பட்டது.

2. ஆ:— சகலருக்கும் மோக்ஷங் கொடுக்க வல்லார் விஷ்ணுவே.

ச:—விஷ்ணுமந்திரங்களுக்குள்ளே அஷ்டாக்ஷரம்மேலானது. ஓம் நமோ நாராயணாய என்பதே அது. அதில் ஓம் நீங்கினால் சப்தாக்ஷரமே எஞ்சும். ஓம் என்பது பிரணவ மந்திரம். அதைச் சர்வஜாதி ஸ்திரீகளும் சூத்திர புருஷர்களும் உச்சரித்தல் கூடாது. ஆகவே அவ்வஷ்டாக்ஷர ஜபம் சகலரும் ஜபிப்பதற்கு யோக்கியமாதல் யாங்ஙனம்? அதனாற்றான் பிரபந்தம் 'அவன் பெய—ரெட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வான மாளவே' என்று அவ்வெட்டெழுத்தைக் கணக்களவிற் சம்மதித்து உச்சரிப்பளவில் விட்டதுபோலும். 'நாடு நகரமு நன்கறிய நமோ நாராயணாய



வென்று—பாடுமன முடைப்பத்தர்', 'நால்வகையால் நமோ நாராயணா வென்று நாமம் பலபரவி', 'நமோ நாரணா வென்னுஞ் சொன்மாலை' என்று எழு ஆறு ஐந்தெழுத்துக்களை ஆண்டு உச்சரிக்கப் படுகின்றன. 'ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோ பாஸகோ வைகுண்ட புவநம் கமிஷ்யதி' என்ற நாராயணாம் த்விஜ புருஷர்களுக்கே சாதகமாம். அன்றியும் ஆச்வமேதிகம் 118-வது அத்தியாயம் 'ருத்திரர்கள் பாகவதர்களென்று வீணாகச்சொல்லிக் கொள்ளுகிறார்கள். ருத்திரர்கள் பகவானுடைய பக்தர்களல்லர் பிராம்மணர்களே பாகவதர்களென்றுகருதப்பட்டிருக்கின்றனர்' என்றது. அதனைக் கண்ட ருத்திரர் விஷ்ணுவிடம் மோக்ஷம்பெற இச்சித்தலும் அதற்காக வைஷ்ணவராதலும் செய்வாரா? 'போற்றி மற்றோர் தெய்வம்' என்ற பிரபந்தப் பாட்டும் விஷ்ணு சகலருக்கும் மோக்ஷங் கொடுக்கவேண்டுமென்ற கருணையுடையவரல்ல ரென்பதைக் காட்டுவது மேல் விளக்கப்பட்டது.

3. ஆ:—விஷ்ணுவே பரம்பொருளென்று சாதிக்குஞ் சுவடிகள் எண்ணிறந்தனவாயிருக்கின்றனவே. சிவனை அவருக்குக் கீழ்ப்பட்டவனென்றும் அவைசொல்லும். அந்த நூல்களெல்லாம் பொய்யா? ஆயின் அவைகட்குக் கதியென்ன?

ச:— ஆச்வமேதிகம் 98-வது அத்தியாயம் 'நராதமர்களான எவர்கள் என்னையாவது சங்கரனையாவது......ஆச்ரயிக்கவில்லையோ அந்த மனிதர்கள் வீணாக ஜீவித்திருக்கின்றனர்' என்பதும், 100-வது அத்தியாயம் 'எவர்கள் என்னையாவது...முக்கண்ணனையாவது உறுதியான பக்தியுடன்...பூஜித்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்கிறார்களோ அவர்கள்...தர்மலோகத்திற்காவது ருத்திரலோகத்திற்காவது...செல்லுகின்றனர்' என்பதும், 103-வது அத்தியாயம் 'எவன் என்னை ஆச்ரயித்து... என்னுடைய மூர்த்தியிலாவது ......ருத்திரருடைய தக்ஷிணாமூர்த்தியிலாவது ஆத்மாவைப் பிரவேசிக்கும்படி செய்கிறானோ......அவன்......என்னையாவது சங்கரனையாவது அடைவான்......அவனுக்குத் திரும்பவும் பிறப்பு உண்டாகாது' என்பதும், 106-வது அத்தியாயம் 'எவன்......என்னுடைய விக்ரஹத்தையாவது சங்கரருடைய விக்ரஹத்தையாவது......அபிஷேகம் செய்கிறானோ அவன் அச்வமேதத்தின் பயனை அடைவான். அவன் பாவங்களிலிருந்து விலகியவனும் சுத்தமான ஆத்மாவை யுடையவனும் முக்தனுமாகி ......என்னுடைய உலகத்தையாவது ருத்ரருடைய உலகத்தையாவது அடைவான்' என்பதும், 114-வது அத்தியாயம் 'அவன் தக்ஷிணாமூர்த்தியை யாவது, என்னையாவது......அடைவான்' என்பதும், 115-வது அத்தியாயம் 'எவன்......எனக்காவது சிவனுக்காவது......பூஜை செய்வனோ......அவன்......பாவம்......நசிக்கும்......அவன்......

என்னுடைய உலகத்தையாவது அடைந்து........', 'எவன்...... என்னுடைய ஆலயத்திலாவது சங்கரருடைய ஆலயத்திலாவது என்னுடைய காயத்ரியையாவது சங்கரருடைய காயத்ரியையாவது ஜபித்து, சங்கம் தூர்யம் வெண்கலமணி இவற்றின் ஒலிகளால் பக்தியுடன் ஒலிக்கச் செய்வனோ அவனுடைய புண்ணியத்தின் பயனைக் கேட்பீராக' என்பதும், 117-வது அத்தியாயம் 'நானும் சங்கரரும் கோக்களாகவும் பிராம்மணர்களாகவும் அச்வத்த விருக்ஷமாகவும் இருக்கிறோம்' என்பதும், 118-வது அத்தியாயம் 'என்னுடைய பக்தன் எப்பொழுதும் தீர்த்தம். சங்கரருடைய (பக்தன்) விசேஷமான (தீர்த்தம்)' என்பதும் கிருஷ்ணருடைய வாசகங்களாய் மிளிர்கின்றன. இப்பிரமாணங்களனைத்தும் வைஷ்ணவ தர்ம பர்வப் பகுதி. இவற்றால், சிவபிரானை நிந்தியாத விஷ்ணு பரத்வ நிரூபண நூற்களே வைஷ்ணவ தர்ம சாத்திரங்களாதற் குரியன வென்பது வெளிப்பட்டது. அவைகளே சோபானக் கிரமத்தில் ஸஜ்ஜனரால் அங்கீகரிக்கப்படுவன. சந்திரன் பிரபல பிரகாசமுடையது என்பது அதனை நக்ஷத்திரங்களோடு ஒத்துப் பார்க்குங் காலத்தில் மட்டும் வாஸ்தவமாகும். அப்படியே விஷ்ணு பரம்பொருளென்பதும் அவரைப் பிரமன் இந்திரன் முதலிய கீழிட்ட தேவர்களோடு ஒத்துப்பார்க்குங் காலத்திற்றான் வாஸ்தவமாகும். சந்திரன் பிரபல பிரகாசமுடையது என்பது சூரியன் முன் பொய்யாய் முடியும். அப்படியே விஷ்ணு பரம்பொருளென்பதும் சிவ சந்நிதியிற் பொய்யேயாம். சூரியன் பிரபல பிரகாசமுடையது என்பது யாண்டும் பொய்யாகாது. அப்படியே சிவபிரான் பரம்பொருள் என்பதும் யாண்டுங் கலங்காத வுண்மையாம். விஷ்ணு முதலிய வேறெந்த தேவதாபர நூல்களிலாயினும் சிவநிந்தாப் பிரசங்கம் லவலேசங் காணப்படுமாயினும் அந்நூல்களை யெல்லாம் ஒன்றும் விடாமல் நெருப்பிலிட்டுக் கொளுத்திச் சாம்பராக்கிக் காற்றிற் றூற்றிவிடவேண்டும். இது சுருதி சித்தமான பரம சத்கைங்கரியமாகும். 'திக்வித்யா மசிவாச்ரயாம்' (சிவபிரானை ஆசிரயியாத சாத்திரங்களைச் சுட்டுவிடு) என்று உத்கோஷிக்கின்றது ப்ருஹஜ்ஜாபாலம்.

சுலோக பஞ்சக விஷயம் முற்றிற்று.

186962

# செய்தித்திரட்டு.

சிவகதியடைந்தார் செய்திகள்:— காரைக்குடி, திருவாளர், ஆவி. ப. முரு. மு. முருகப்ப செட்டியாரவர்கள் தைமீ கூஉ சிவபதமெய்தினர். அறிவாற்றலும், அமைதியான குணமும், தெய்வபக்தியும், நடுவுநிலைமையு முடையவர்கள்.

தேவகோட்டை திருவாளர், வெ. கரு. சோம. சோமசுந்தரம் செட்டியாரவர்களின் அருமைத்தாயார், தைமீ கூஉயன்று சிவபதமடைந்தார்கள். பர்மாவிலிருந்து சோமசுந்தரம் செட்டியாரவர்கள் அன்று தினமே வந்து கிரியைகள் நடத்த நேர்ந்தது புண்ணியவசமாகும்.

புதுவயல், திருவாளர், மு. ப. வீர. பழ. பழநியப்பசெட்டியாரவர்கள் தைமீ கசஉ சிவபெருமான் திருவடி நீழலடைந்தார்கள். சற்குண சம்பன்னரான இவர்கள் இருந்து செய்யவேண்டிய நற்காரியங்கள் பலவற்றையும் தனயன் வினைதீர்த்தான் செட்டியார் பொறுப்பில் வைத்துச் சென்றுவிட்டார்கள்.

கண்டமாணிக்கம், திருவாளர், மெ. சி. பெரி. சோமசுந்தரம் செட்டியாரவர்களின் அருமைத்தாயார், மாசி கடுஉ சிவகதியடைந்தார்கள். புண்ணியப்புதல்வரைப் பெற்றவர்கள்.

கழக நிகழ்ச்சிகள்:— சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, சண்முக பக்தஜன சபையார், திருவருளைத் திருக்கார்த்திகை விழாவில் வருடந்தோறும் பாடற்றொண்டு புரிந்து தெரிசித்துவரும் 25-வது ஆண்டு வெள்ளிவிழா இந்தக்கார்த்திகைமாதம் திருவருணைத் திருச்சந்நிதியில் நடைபெற்றது. போளூர், போர்டு ஐஸ்கூல், தமிழ்ப்பண்டிதர், திரு, வி. சாமிநாத பிள்ளை யவர்கள் ஐந்து வெண்பாக்கள் கூறிவாழ்த்தினர்.

கண்டனூர், இராமகிருஷ்ண சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவும், இராமகிருஷ்ண தேவரின் நூற்றிரண்டாவது விழாவும் மாசி உ௳ சென்னை, 'நவசக்தி' ஆசிரியர், திரு, வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் அறிஞர்களின்சொற்பொழிவுகளுடன் இனிது நடைபெற்றது.

பாலைநாட்டார் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழா, கோட்டையூரில் தைமீ உஎ௳ சென்னை சர்க்கார் விளம்பர இலாகா மந்திரி கனம் எஸ். இராமநாதன் அவர்கள் தலைமையில் நன்கு நடைபெற்றது.

காரைக்கால் சைவசித்தாந்த வித்யாச்ரமத்தின் நான்காவதாண்டு நிறைவிழா, மாசி கடு, கசு, களைகளில் காரைக்காலம்மையார் சந்நிதானத்தில் கோவை வழக்கறிஞர், உயர்திரு, C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையில் பேரறிஞர்களின் விரிவுரைகளுடன் நடைபெற்று நிறைவேறியது.

**காரைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா:—** 1938 ஏப்ரல் 15, 16, 17உ களில் திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு. சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமியவர்களின் சீரிய தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெறும். பேரன்பர்கள் பிரசங்கவாரி பருகி இன்புறலாம்.

**திருமருதூர்:—** ஸ்ரீ பழமலைநாதர் விபசித்து முனிவருக்கு ரிஷபாரூடராய் எழுந்தருளி வந்து காட்சி கொடுத்த ஐதீகம் ஆறாந்திருநாளிலும், ரதோற்ஸவம், ஒன்பதாந்திருநாளிலும், மணிமுத்தாநதிக்கு ஐம்பெருங்கடவுளர் எழுந்தருளி தீர்த்தம் வழங்கியது பத்தாந்திருநாளாகிய மகநாளிலும் மிக விமரிசையாக நடைபெற்றன. தை உசுஉ முதல் மாசி சுஉ வரை பிரமோற்சவம் எல்லாவகையானும் இனிதே நிகழ்ந்து நிறைவேறியது.

**வேதாரணியம்:—** முன் பத்திரிகையில் இத்தலைப்புள்ள செய்தியின் ஈற்றிலுள்ள எழுவரிகளைப் பின்வருமாறு மாற்றிக்கொள்ளும்படி கருடூர் சிவஸ்ரீ அ. சிவசுப்பிரமணியசிவாசாரியார் தெரிவிக்கிறார்.

திருப்பணியாளர் இராமநாதன்செட்டியாரவர்களுக்கும், திருவாளர்களான, தேவகோட்டை, சுப்பிரமணியன்செட்டியாரவர்களுக்கும், அள. சுப. பழ. சுப்பிரமணியன்செட்டியாரவர்களுக்கும், கோட்டையூர், க. வீ. சொ. அளகப்ப செட்டியாரவர்களுக்கும் கும்பாபிஷேகத்தன்று பரிவட்டம் கட்டினார்கள். மறுதினம் திருப்பணியாளர் இராமநாதச் செட்டியாரவர்களால் சிவமகாயாகநிர்வாஹகரும், சிவப்பணியாளரும், திருச்சுழியல் திருப்பணியாளருமான தி. அ. சு. அ. சுப்பிரமணியன் செட்டியாரவர்களுக்கு, பல அரிய பெரிய வித்துவான்கள் புடைசூழப் பெரியதோர் சால்வையை வித்துவத் மரியாதையாக ஸ்ரீவேதநாயகியம்பாள் சந்நிதியில் வழங்கியும் முகமன் கூறியும் சிவப்பிரசாதம் வழங்கச் செய்தும் மகிழ்வூட்டினர்.

## "சிவநேசன்" ஆண்டுத் தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 1—8—0 | அதற்கு மூலதனம் | 30—0—0 |
| அயல்நாட்டிற்கு | ரூ 2—0—0 | அதற்கு மூலதனம் | 40—0—0 |

தனிப்பிரதி விலை அணா 0—2—0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4—0—0

பொதுமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8—0—0

---

திட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.